ஞானச்சுடர்



நடிகர் திலகம் **சிவாஜி கணேசன்** அளிக்கும்

கஸ்தூரி பிலிம்ஸ்

தேனும் பாலும்

மூலக்கதை: ஸ்ரீமதி வசனம்: ஆரூர்தாஸ்
பாடல்கள்: கண்ணதாசன் - வாலி
இசை: M.S. விஸ்வநாதன்
ஒளிப்பதிவு: P.N. சுந்தரம்
எடிட்டிங்: R. தேவராஜன் கலை: செல்வராஜ்
ஸ்டில்ஸ்: சிம்மையா - ஆனந்த் ஸ்டூடியோ: சாரதா

திரைக்கதை - டைரக்ஷன்:

P. மாதவன். B.A.,

தயாரிப்பு:

V.C. சுப்பராமன்



கை உரிமையாளர்கள் **வெங்கடேஸ்வரா மூவீஸ்** 7, முதல் கிராஸ் ரோடு, ஸ்ரீராம் நகர், சென்னை-18

நகரத்தார்

திங்கள் இதழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய சித்திரை * ஏப்ரல்-13, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு ஒன்று

யார் இவர்கள்?

உ
சிவமயம்



மலர்களின் கூட்டுறவே மாலை!

பல செடி கொடிகளின் இணைந்த வாழ்வே சோலை!

தனிமரம் தோப்பாவதில்லை!

தனித்துளி வெள்ளமாவதில்லை!

வளம், வாய்ப்பு, உரிமை, பெருமை, இவற்றைப் பெறக் கூட்டுறவு இன்றியமையாதது.

மன்னருக்கு முடி சூட்டி வாழ்ந்த மரபு நம் மரபு.

மன்னர்களைப் போல வாழ்ந்த இனம் நம் இனம்.

அத்தகைய பெருமைகளை உடைய நம் இனத்தின் நலம் காக்க — பல்வேறு பகுதிகளில் (கடல் கடந்த நாடுகளிலும்கூட) வாழுகின்ற நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்புரிய, சுருங்கக் கூறின் நாம் அனைவரும் ஒரு குடும்பம் என்ற நிலையினைப் பெற ஓர் அமைப்பு இன்றியமையாதது.

அதனை உணர்ந்து நற்பணி புரிய நகரத்தார் வருகிறது.

இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று இவை இன்றைய உலகில் இன்றியமையாதனவாகத் திகழ்கின்றன.

உலக ஒற்றுமை என்ற உணர்வு – மண், மலை, கடல் இவற்றைக் கடந்தது. இந்த உணர்வினை முழுமையாகப் பெற்றவர் அண்ணல் காந்தியடிகள்.

அப் பெருமகனுர் தம்மை ஒரு குஜராத்தி என்று சொல்லிக் கொள்வதிலும், குஜராத்தி மொழியிலே பேசுவதிலும் பெருமை கொண்டார் என்ருல் மிகையாகாது.

பழுதற்ற மரபு உணர்ச்சியால் பழுது ஏதும் நேராது என்பதற்கு அண்ணலே எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்கள்.

வரப்புயர நீர்உயர்ந்து நெல்உயர்ந்து குடிஉயர்ந்து கோன் உயர்தல்போல, மரபுஉயர மாநிலம் உயர்ந்து நாடே உயரும்.

இத்தகைய எண்ணத்துடன் தொடங்கப் பெற்றுள்ள இத் திங்கள் இதழ் நம் மரபினரின் நற்பணிகளையும், பல்வேறு சிறப்புக் களையும், இன்றையத் தலைமுறையினர் தெரிந்து கொள்ளவும், அத்தகைய நற்பணிகளை அவர்கள் செய்ய ஊக்க மூட்டவும் வரலாற்றின் துணையோடு பல்வேறு தலைப்புக்களில் பல பகுதிகளைத் தரத் திட்டமிட்டுள்ளது.

அவற்றின் சில பகுதிகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. ஏனையப் பகுதிகள் தொடர்ந்து வெளிவரும்.

எழுத்தார்வம் மிக்கவர்களின் கவிதை, கட்டுரை, கதை, மற்றும் சுவைத்துணுக்குக்கள், செய்திகள் முதலியவை பேரார்வத்துடன் ஏற்றுக்கொள்ளப்பெற்றுப் பேரன்புடன் வெளி யிடப்பெறும் என்பதனைப் பணிவுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

நகரத்தார் என்ற ஆலயத்தின் கோபுர வாயிலாக—

நகரத்தார் என்ற பேராற்றின் புனிதமான துறையாக—

நகரத்தார் என்ற திருமணத்தின் இசை பிடிமானமாக—

நகரத்தார் வெளிவருகிறது.

நகரத்தார் நலம் காக்கத் திங்கள் தோறும்
நடைபயிலும் நகரத்தார் இதழ் காக்க
நன்மனத்தார் நகரத்தார் அனைவரையும்
நல்உதவி செய்க என வேண்டுகிருேம்.

சென்னை,
சௌமிய சித்திரை ஒன்று

இங்ஙனம்
சேது நிலையத்தார்

அட்டையை அலங்கரிப்பவர்
பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர்

வாழ்த்துக்கள்

நகரத்தார் மரபின் நலம் கருதித் தொடங்கியுள்ள நகரத்தார் திங்கள் இதழ் வளர்பிறையாக வளர்ந்தோங்க என் இதயங் கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
23–4–69.

மு. அ. முத்தய்யா செட்டியார்
(செட்டிநாட்டரசர்)

நகரத்தார் சமூக நலன்களைப் பாதுகாக்க ஒரு பத்திரிக்கை மிக இன்றியமையாது வேண்டப்படுவது. நகரத்தார் என்ற பெயரைக் கொண்டு ஒரு திங்கள் இதழ் வெளியாகின்றது என்று அறிந்து மிக உவகை கொண்டோம். அவ்விதழ் சீரிய நோக்கங்களுடன் சிறந்த பணியாற்றி நகர மக்கள் நலன்களைக் காக்க வேண்டுமென எல்லாம் வல்ல எம்பெருமானை வழுத்துகின்றேன்.

பழ. சிதம்பரம் செட்டியார்
தலைவர்
சன்மார்க்க சபை

மேலைச்சிவபுரி,
13–4–69.

"நகரத்தார்" இதழ் பழங்காலப் பெருமையையும் நிகழ்காலப் போக்கினையும் எதிர்கால வளர்ச்சியையும் காட்டுவதாக இருத்தல் வேண்டும்!

நகரப் பெருமக்களின் துணையால் சேது நிலையத்தின் இதழ் முயற்சி நீடு வாழ்க!

அன்பன்
டாக்டர் வ. சுப. மாணிக்கம்
முதல்வர், தமிழ்ப் பேராசிரியர், அழகப்பா கல்லூரி

காரைக்குடி,
9–4–69.

அன்புடையீர்,

வணக்கம். "நகரத்தார்" என்ற நற்பெயரில் மாத இதழ் ஒன்று தொடர்ந்து நடத்த விருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

உங்கள் இதழ் தொழில், கலை, கல்வி, இசை, இலக்கியம் இவைகளில் சிறந்து விளங்கும் மேதைகளின் நல்லாசி, ஒத்துழைப்பு, ஆலோசனை ஆகியவற்றைப் பெற்று அனைவருக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காக, ஊன்றுகோலாக ஒளிரவும், உதவவும் வேண்டும்.

இதழ்கள் சீரோடும், சிறப்போடும் அமைவதோடு அனைவருக்கும் பயன்படும்படியும், எல்லோரும் பாராட்டும் வண்ணமும் அமைய வேண்டும் என்று விரும்புவதோடு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை-14,
21-4-69.

அன்புடன்
ஏ. எல். சீனிவாசன்
தலைவர், நகரத்தார் கலைக் கழகம்

நாம், நமக்கும், நம்முடன் வாழும் மக்களுக்கும் இறைவனுக்கும், அவர்களுடன் கொண்டுள்ள உறவுக்குத் தக்கபடி நம் கடமையைச் செய்தால் அதுதான் அறம். இந்த அறத்தின்படி வாழ்ந்து காட்டியிருப்பவர்கள் நகரத்தார். இத்தகைய மகத்தான சமூகத்தை ஆதரித்து, நகரத்தாரின் செம்மைகளை எடுத்து எழுதிட "நகரத்தார்" என்ற மாதப் பத்திரிக்கை வந்திருக்கிறது. இப் பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. புலவர் நாகசண்முகம், பண்பாளர், அன்பாளர். இப் பத்திரிக்கையின் பரிந்துரையாளர் திரு. எஸ். பிஎல். பழநியப்பா. பி. ஏ., பி. எல்., தக்கவர், தனிப் பெரும் எதிர்காலத்தைக் கொண்டவர். இவர்கள் வாழ, நகரத்தார் பத்திரிக்கை வாழ, நகரத்தார் வாழ என் நல்வாழ்த்துக்கள்.


சென்னை,
21-4-69.

தமிழ்வாணன்
ஆசிரியர், கல்கண்டு

எங்கள் நகரத்தார் என்றென்றும் வாழ்கவெனத்
தங்கத் திருமங்கை தாள்பணிந்தேன்—சிங்கக்
கொடிகொண்டு கொண்டுவிற்றுக் கொண்டுவந்த பொன்னைப்
படிகொண் டளந்த படி.

சென்னை,
19-4-69.

நாரா நாச்சியப்பன்



முத்து

புலவர் நாகசண்முகம்

காவிரிப் பூம்பட்டினத்துக் கரையோரம் வாழ்ந்த இனம்
தென்றல் தவழ்ந்தாடும் தென்பாண்டி மண்டலத்தில்
வந்து குடியேறி வாழ்வுபல தந்தகதை
தமிழ்நாட்டு வரலாற்றில் தனிமைமிகு பொன்னேடு.
நகரத்தில் வாழ்ந்தமக்கள் நகர்விட்டு வந்தாலும்
நகர்போல ஊர்கள்கண்டு நகரத்தார் ஆனார்கள்.
பழமைக்கும் புதுமைக்கும் பாங்கான ஒருதொடர்பாய்
நாம்செய்த தவத்தின் நல்லதொரு பெருவரமாய்
செல்வம்ஒன்று தோன்றியது சிறப்புமிகப் பெருகியது.
அண்ணாமலை மீது ஆடும்சுடர் நோக்கி
எல்லாரும் செல்வார்கள் இன்பம்மிகக் கொள்வார்கள்
அண்ணாமலையார் திருவுடையார் ஆடும்சுடரை மனத்தேந்தி
நகரத்தார் மரபில் நான்பிறப்பேன் என்பதுபோல்
வண்ணக் குழந்தையாய் வந்திங்கு பிறந்துவிட்டார்
அண்ணாமலையானார் அரசானார்; ஆடும்இறைவன் பெருநகரில்
கல்விஅரசி கலைமகட்குக் கனிவுடன்ஆலயம் தோற்றுவித்தார்.
நன்றி மறவோம்! நகரத்தார்பண்பு அதுதான்
என்று உலகிற்கு எழிலரசர் உணர்த்திநின்றார்.
சொந்த நிலம்விட்டுச் சோழமன்னர் தேசம்விட்டு

வாழவந்த நம்மை வாழவைத்த பாண்டியர்க்கு
நன்றி செலுத்துதல் நம்கடமை என்றெண்ணிக்
குலம்தழைக்கப் பிறந்த கொஞ்சுமொழிச் செல்வருக்கு
மூத்தமைந்தருக்கு முத்து என்று பெயர்வைத்தார்.
முத்தமிழ்ப் பாண்டியர்க்கு முத்தே பெருஞ்செல்வம்.
அப்பெயரை வைத்தார் அன்பான செயல்புரிந்தார்.
பாண்டியனார்முத்து பாங்கான பொன்முத்து
நம்மரபின் முத்தாகி நலமாக வளர்ந்ததம்மா!
முத்தென்றால் முத்துஇது முழுமை பெற்றமுத்து
எல்லாரும் போற்றுகின்ற எழிலான நல்முத்து
பணிவிற்கும் அன்பிற்கும் பண்புமிகு செயல்களுக்கும்
அணியாக விளங்குகின்ற அருள்முத்து
பெருமுத்து, உயர்முத்து, பேர்பெற்ற திருமுத்து.
அம்முத்து அளப்பறிய நம்சொத்து
பழங்கால மன்னரெல்லாம் பல்வகைச் சிறப்புற்றாலும்
ஒன்றிலே சிறந்தார்என்றே உயர்வுற்றார் புகழ்பெற்றார்.
நம்அரசர் முத்தையா நாடும் சிறப்பெல்லாம்
ஒருவரே பெற்றார் ஒப்பற்ற புகழ்பெற்றார்.
சோறு படைப்பதிலே சோழமன்னர்;
வீரமிகு செயல்களிலே சேரமன்னர்;
மொழிகாக்கும் ஆற்றலிலே பாண்டியனார்;
கலைபோற்றும் உள்ளத்தால் பல்லவனார்;
நால்வேந்தர் ஆற்றல்களை ஒருவர்பெற்றார்;
பாவேந்தர் போற்றுகின்ற செல்வர் ஆனார்;
அரசர்கள் ஆட்சிசெய்த அப்போதும் அரசர்ஆனார்;
அமைச்சர் ஆட்சிசெய்யும் இப்போதும் அரசர்ஆனார்;
எப்போதும் அரசர்ஆவார் என்றென்றும் நமைக்காப்பார்.



*

மணமக்க

வாழ்க !

*

உயர்திரு. அ. மு. மு. அருணசலம் செட்டியார் அவர்களின் மகன் திருவளர் செல்வன் அழகப்பனுக்கும் உயர்திரு. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் மகள் திருநிறை செல்வி அழகம்மைக்கும் காரைக்குடியில் 4-4-69-ஆம் நாள் திருமணம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. மணமக்களுடன் இருப்பவர்கள் சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் உ. அ. பெரி. மு. அரு. அருணசலம் செட்டியார் அவர்கள்.

உயர்திரு. எஸ். அழகு சுந்தரம் செட்டியார் (துணைச் செயலாளர், மதுரை வங்கி) அவர்களின் மகன் திருநிறை செல்வன் சுப்பிரமணியனுக்கும் B. E. (Final), உயர்திரு சா. அழகப்ப செட்டியார் (பங்குதாரர், ஆர். ஆர். பார்மசி) அவர்களின் மகள் திருநிறை செல்வி சிவகாமிக்கும் 23-1-69 - ஆம் நாள் மேலைச்சிவபுரியில் திருமணம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.


*

மகிழ்ந்து

என்றும்

வாழ்க !

*





○

செல்வங்கள்

வாழ்க !

○

உயர்திரு. மெ. செ. மெய்யப்பன், பி. இ., (உரிமையாளர், ஓட்டல் ஓசியானிக்) அவர்களின் செல்வி சீதாவுக்கும் செல்வன் இராமசாமிக்கும் 23-1-1969 – ஆம் நாள் காரைக்குடியில் புதுமை விழா, களிப்புடன் நடைபெற்றது.

○

சிறந்து

என்றும்

வாழ்க !

○



நகரத் கோயில்கள்



தமிழண்ணல்' இராம பெரியகருப்பன் எம். ஏ.,

[தமிழண்ணல் அவர்கள் நெற்குப்பையைச் சேர்ந்த வர்கள். இனிய எளிய நடையில், திட்பம் நிறைந்த வகையில் கவிதை புனைவதிலும், கட்டுரை வரைவதிலும் வல்லவர்கள். எதையும் வரலாற்று நோக்கில் ஆராய்ச்சித் திறனோடு எழு தும் கலை கைவரப் பெற்றவர்கள். சொற்பொழிவாற்றும் திறமை மிக்கவர்கள். இவர்கள் தொகுத்த தாலாட்டு என்ற நூல், பல பதிப்புக்கள் வெளிவந்து பல்லாயிரக் கணக் கான பிரதிகள் விற்பனை ஆகியுள்ளது. அண்ணல் அவர்கள் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணி யாற்றி வருகிறார்கள்.]

[நகரத்தார்களின் கோயில்வழி நாகரிகம் மிகச் சிறப்புடையது. அதுபற்றிய விரிவான, விளக்க மான கட்டுரைத் தொடர் இது. இதுவரை வெளிவந்துள்ள கருத் துக்கள் பலவற்றைத் தொகுத் தும், ஆராய்ச்சிக்குரிய பகுதிகளை விரித்தும் இத் தொடர் கட்டு ரைகள் வெளிவரும். இவை சிறப் பாக நகரத்தார் வரலாற்றையும் பொதுவாகத் தமிழர்தம் சமய வாழ்வையும் விளக்குவனவாகும். —ஆசிரியர்.]

1

தமிழர்தம் வாழ்வு சமயத் தோடு பின்னிப் பிணைந்து கிடக் கிறது. சமயத்தில் புகுந்துவிட்ட மூட நம்பிக்கைகள், வெளிவேடங் கள், சமுதாய ஏற்றத் தாழ்வுகள் இன்னபிற குறைகளால் அச் சம யங்களையே வெறுப்பார்தாமும், அச் சமயப் பிணிப்பை விட்டுத் தம் வாழ்வைப் பிரித்துக்கொள்ள இயலாவாறு அஃது அன்றாட வாழ்வுடன் ஊடாடி, உறவாடிக் கிடக்கின்றது.

வடவர் தொடர்பால்தான் இச் சமயப் பிடிப்பு ஏற்பட்ட தெனல் தவறு. தமிழகச் சமயங் களாகிய சைவ-வைணவம் இரண் டும் தமிழர் வாழ்வில் தோன்றி, உருவானவையாகும். இச் சமயங் களை வடமொழியாளர் தமக்குத்

தொடர்பு படுத்திக்கொண்டுவாழ வழி தேடிக்கொண்டனர். பெயர் களை வடமொழியாக மாற்றிக் கொண்டமையும், சில சடங்கு முறைகளில் மாற்றங்களை ஏற் படுத்தியமையும், வடமொழி மந் திரங்களை ஓதும் விதிமுறைகளை வகுத்தமையுமாகிய இவற்றைக் கருதி, நாம் இம் மதங்கள் வட மொழியாளர் தொடர்பால் தமி ழகத்தில் திணிக்கப்பட்டவை எனக் கருதுவது நமது தவக் குறையேயாகும். நன்றாக ஆராய்ந்தால் இச் சமயங்கள் தமிழர்தம் வாழ்வின் ஒரு பகுதி யாகத் திகழ்தல் உணரப்படும். தொல்காப்பியர் நிலத்தின் கருப் பொருள்களை வகைப்படுத்தும் போது, "தெய்வம் உணாவே மா மரம் புள் பறை செய்தி யாழ்" என (தொல் : 964) முதற்கண் தெய்வத்தை வைத்தார்.

"மாயோன் மேய
காடுறை உலகமும்
சேயோன் மேய
மைவரை உலகமும்
வேந்தன் மேய
தீம்புனல் உலகமும்
வருணன் மேய
பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி
மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையாற்
சொல்லவும் படுமே"

(தொல் : 951)

திருமால், சிவபெருமான், இந்தி ரன் (வேந்தன்) வருணன் ஆகிய நால்வரும் முறையே முல்லை நிலம், குறிஞ்சிநிலம், மருதநிலம், நெய்தல்நிலம் ஆகியவற்றிற்கு உரியராவர் என்பது அவர் கருத்து. பாலை நிலத்திற்குக் 'கொற்றவை' என்ற தெய்வமும் உரியவள் என்பதைத் தொல்காப் பியர் உணர்த்தியுள்ளார். (தொல்: 1005) இங்ஙனம் நில வாழ்வு முறையோடு தோன்றி வளர்ந்த தாதலின், இச் சமய உணர்வு இன்று தமிழர்தம் வாழ்வில் பிரித்துவிடக் கூடிய 'பிறிதின் கிழமை'யாக இல்லாமல், பிரிக்க முடியாத உறுப்பாகிய 'தற் கிழமையாக' இருக்கின்றது.

இந்திய முன்னாட் குடியரசுத் தலைவர், டாக்டர். எஸ். இராதா கிருட்டிணனர் அவர்கள் உருவ வழிபாடும் அதனை ஒட்டிய சடங்கு முறைகளும் திராவிடர் களுடையனவே என்ற கருத்தைத் தமது "The Hin lu View of Life" என்ற நூலில் தெளிவாகச் சுட்டி யுள்ளார். எனவே, இச் சமயக் கோட்பாடுகளில் பலவற்றைத் திராவிடர்களிடமிருந்து வட மொழியாளர் பெற்றனரேயன்றி, பின்னவரிடமிருந்து முன்னவர் பெற்றதாகக் கருதுதல் தவறாகும். இறந்துபட்ட வீரர்களுக்குக் கல் லெடுத்து வழிபடுவது தமிழர்தம் மரபாகும். தொல்காப்பியரே,

"காட்சி கால்கோள்,
நீர்ப்படை, நடுகல்
சீர்த்தகு சிறப்பிற்
பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற்
கல்லொடு புணர"

(தொல் : 1006)

என்று இக் கல்லெடுக்கும் மரபை விரித்து, வகைப்படுத்திக் காட்டி யுள்ளார். இக் கல்லுக்குப் பீலி சூட்டி, மாலை அணிவித்து வழிபடு வர்;பலியிடுவர்;பிரப்பரிசி முதலிய வற்றைப் படைப்பர். இங்ஙனம் ஏற்பட்ட மரபு வழி வந்ததே உருவ வழிபாடும், கோயில் எடுத் தலுமாகும். இதன் ஆணிவேராக அமைந்த தமிழர்தம் நாகரிகக் கூறுகளை, இன்றும் காணவேண்டு மெனில், தமிழர்களில் பழமையை

“நகரத்தார்”
பற்றி
முதலமைச்சர்
பக்கம் - 22

எளிதில் விட்டுவிடாத நகரத்தார்களிடத்திலேதான் காணலாம். எனவே நகரத்தார்களிடம் காணப்படும் கோயில் வழி நாகரிகத்தை ஆராய்ந்தால், தமிழர்தம் சமயக் கோட்பாடுகளின் அடிப்படைகளை உணரலாம் என்ற நோக்குடன், இக் கட்டுரையைத் தொடங்க விரும்புகிறேன்.

முதற்கண் ‘நகரத்தார்’ என்ற பெயர்க் காரணத்தை ஆராய்தல் நலம். பெரிய நகரங்களை அமைத்துச் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்ததால் ‘நகரத்தார்’ என்ற பெயர் வந்ததென்பர். சங்க காலப் பெரு ‘நகர’மாகிய காவிரிப்பூம்பட்டினத்தைத் தமது வாழிடமாகக் கொண்டமையை இதற்குத் தக்க காரணமாகக் காட்டுவர். ஆனல் ‘நகரம்’ என்ற சொல் முன்பு இப் பொருளில் வழங்கவில்லை. ‘கூடு விளங்கு வியன் நகர்’ என்ற புறநானூற்றுப் பாட்டில் (148) நெற் கூடுகள் மிகுதியாக விளங்குகிற பெரிய வீடு என்று பொருள்படுகிறது. ‘செழு நகர் முற்றம்’ (பெரும்பாண்—வரி; 435), ‘பொன் துஞ்சு வியன் நகர் (மேற்படி—வரி—444) போன்ற இடங்களில் நகர் என்ற சொல் செல்வம் நிலைபெற்ற பெரிய அரண்மனையைக் குறிக்கிறது. இதனல் ‘அரண்மனை போன்ற பெரிய, பெரிய வீடுகளை அமைத்து வாழும் இயல்புடையவர்களாதலால், இவர்கள் நகரத்தார் எனப்பட்டனர் என்று பேராசிரியர் அவ்வை. சு. துரைசாமி போன்ற பெரியவர்கள் கருதுகின்றனர்.

இச் சொல்லுக்குப் பிறிதொரு முறையில் காரணம் கருதவும் இடமிருக்கிறது. புறநானூற்றில் ‘முக்கட் செல்வர் நகர்’ (புறம்: 6) என்று வருகிறது. இங்கு, பழைய உரையாசிரியர், “மூன்று திரு நயனத்தையுடைய செல்வரது கோயில்’ என்றே உரையெழுதுகிறர். சிலப்பதிகாரத்திலும்‘நகர்’ என்ற சொல் ‘கோயிலை’க் குறிக்கும் இடங்கள் உண்டு. (14 –9) மேலும் சிலப்பதிகாரத்தில் ‘நகர வீதி’ என்று வருமிடத்தில் கோயிலிருக்கும் வீதி என்றே பொருள் கொள்ள இடந்தருகிறது.

“வண்ணமும் சுண்ணமும்
தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும்
மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு
நகர வீதியும்” (5—13; 15)

என்ற இடத்தில் வண்ணப்பொடி, (தொய்யிற் குழம்பும் பூசும் பொடியும்), குளிர்ந்த சந்தனக் குழம்பு, அகில் முதலிய நறும் புகைப் பொருள்கள், மணப் பொருள்கள் ஆகியன விற்கப்படுகிற தெருவென்பதாலே இது கோயிலிருக்கும் தெருவென்பது பெறப்படுமன்றே? இன்றும் கோயில்கள் இருக்கும் தெருக்களிலே இவைகள் விற்கப்படுவதைக் காண்கிறேமல்லவா? எனவே ‘நகர்’ என்ற சொல் கோயில்களைக் குறிக்க வழங்கியமை உறுதிப்படும். கோயில் என்ற சொல்லும் முதற்கண் (கோ+இல்) அரசனுடைய அரண்மனையைக் குறிக்க வழங்கிப்

பின்பு இறைவனுடைய இருக்கையையும் உணர்த்துவதாயிற்று. இது போலவே 'நகர்' என்ற சொல்லும் முதற்கண் அரண்மனையையும், அரண்மனை அனைய வீடுகளையும் குறிக்க வழங்கிப் பின்பு கோயில்களையும் குறிப்பதாயிற்று எனலாம். தமிழர்களிலே ஒரு சாரார் தாம் இருக்கும் ஊர் தோறும் ஒரு கோயிலைக் கட்டிக் கொண்டு, அக் கோயிலின் வழிப்பட்ட குடிமக்களாய்த் தம்மைக் கருதிக்கொண்டு வாழ்ந்தமையால் 'நகரத்தார்' என்று அழைக்கப்பட்டனர் என்பதே மிகப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. இன்றும் 'நகரக் கோயில்கள்' என்று, இவர்களின் ஒன்பது கோயில்களும் அழைக்கப் படுகின்றன. ஊர்தோறும் உள்ள கோயில்களில் இவர்களின் ஆட்சிக்குட்பட்ட கோயில்கட்கு 'நகரக் கோயில்' என்றே பெயர் வழங்குகிறது. தமிழகத்திலே மட்டுமன்றி இலங்கை, பர்மா, மலேயாவிலும் இவர்கள் கூடி வாழ்ந்த ஊர்தோறும் 'நகரக் கோயில்கள்' உண்டு. தமிழகத்தில் செட்டிநாட்டு ஊர்களில் வாழ்கின்ற இவ் வழியினர் 'நகரத்தார்' என்றும் இவரல்லாத பிறரெல்லாம் 'நாட்டார்' என்றும் அழைக்கப்படுவதற்கு மிகப் பொருத்தமான காரணம் என்ன? இக் கோயில் வழிப்பட்ட குடி மக்களையே 'நகரத்தார்' என அழைத்தனர். பிறரெல்லாம் நாட்டார் ஆயினர். இவர்களும் நாட்டார்களேயாயினும்— நாட்டுக்கு உரியவர்களேயாயினும் வழிபடும் திருக்கோயிலால் 'நகரத்தார்' ஆயினர். எனவே இத்தகைய நகரத்தார்களின் ஒன்பது கோயில்கள் பற்றிய செய்திகளையும், இவர்களின் கோயில் வழிப்பட்ட நாகரிகத்தையும் 'தமிழர் வரலாறு' என்ற உணர்வுடனும், 'திராவிட நாகரிசம்' என்ற கருத்துடனும் வரும் கட்டுரைத் தொடர்களில் காண்போம்.

பன்னிரண்டு வயதில்
பத்திரிக்கை நடத்தியவர்!

பள்ளிப் பருவத்தில் பத்திரிகை விற்றவர்கள் எத்தனையோ பேர்! ஆனால் அப் பருவத்தில் அச்சிட்ட பத்திரிகை நடத்தினார் ஒருவர். பத்திரிக்கையின் பெயர் பாய்ஸ் ஓன் (Boy's Own) மொழி ஆங்கிலம். ஆசிரியர் ஏ.எம்.எஸ். ராகவன் பி.ஏ ,எல்.டி., அவர் பத்திரிக்கைக்கு மட்டுமல்ல, அதை நடத்தியவருக்கும் ஆசிரியர் ஆவார். டள்ளி-கலவல ராமானுஜம் செட்டி உயர் நிலைப் பள்ளி; (இன்றைய மு. சித. உயர் நிலைப் பள்ளி) பயின்றது ஒன்பதாம் வகுப்பில்! பத்திரிக்கையின் விலை ஆறே காசுகள். (அன்று ஓர் அணா) அஞ்சல் மூலமும் அந்தப் பத்திரிக்கை அனுப்பப் பெற்றது. அப் பணியை அவரும் அவர் நண்பர்களுமே செய்தார்கள். அவர் வேறு யாருமல்ல, நம் நகரத்தார் முதல் இதழை வெளியிடுகின்ற நம் அரசர்தான்!

கல்வி தந்த கொடையாளர்


பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதச் செட்டியார்

[பேராசிரியர் அவர்கள் நெற்குப்பையைச் சேர்ந்தவர்கள். பெரும்புலவரான கருணாலய பாண்டியர் அவர்களிடம் தமிழ்க் கல்வியினை முறையாகக் கற்று மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பட்டத்தைப் பெற்றவர்கள். சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் முதல்வராகத் தேர்ச்சிபெற்று ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பெயரால் வழங்கப் பெற்றுவரும் ஆயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்றவர்கள்—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், கீழ்த்திசைக் கல்விப் பகுதித் தலைவராகவும் இருந்து போற்றுதற்கரிய பணிகள் பல செய்துள்ளார்கள். கானடா நாட்டில் மாண்ட்ரில் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் பல்கலைக் கழக மாநாட்டில் பங்கு பெற்றதோடு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள பல கல்வி நிலையங்களைப் பார்வையிட்டு வந்துள்ளார்கள். கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழ் மாநாட்டின் தமிழ்ப் பிரிவிற்குத் தலைமை தாங்கிய பெருமை உடையவர்கள்—மத்திய அரசின் சாகித்திய அகாடமியில் தமிழ்ப் பிரிவு ஆலோசனைக் குழுவில் பல ஆண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளதோடு தமிழ் நூல் விவரத் தொகுப்பாளராகவும் இருந்து பெரும் தொண்டு ஆற்றியுள்ளார்கள். தமிழ் இசை வளர்ச்சித் துறையில் இவர்கள் பல பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றி வருகிறார்கள். இயல், இசை என்ற இரு துறைகளிலும் பேராசிரியர் அவர்கள் ஆற்றியுள்ள தொண்டு ஈடு இணையற்றதாகும்.]

பெருங் கொடை வள்ளல் டாக்டர் செட்டிநாட்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கானாடுகாத்தான் என்னும் நகரில் தன வணிகர் மரபில், 30-9-1881ல் பிறந்தார்கள். இவர்கள் தந்தையார் பெயர், முத்தைய செட்டியார், தாயார் பெயர், மீனாட்சி ஆச்சி.

பொதுநலப் பணிகள்

'பொருளைத்தேடுதலும்,சேர்த்து வைத்தலும், பாதுகாத்தலும் அற வழியில் செலவிடுதலும் ஆகிய செயல்களில் வல்லவரே அரசர்' என்ற அருமறைக்கு ஏற்பத் தாம் வாழ்தல் வேண்டும் என இவர்கள் எண்ணினார்கள். நாட்டு மக்களுக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தல் வேண்டும் என விரும்பி



அண்ணுமலை அரசர்

ஞர்கள், விரும்பியதற்கு ஏற்பக் காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப் பதவி இவர்களை நாடி வந்தது. மூன்று ஆண்டுகள் தலைவராக இருந்தபோது பொதுமக்கள் இவர்களின் ஆட்சித் திறனையும் அருந்தொண்டுகளையும் வியந்து பாராட்டினர்.

இவர்கள், கானாடுகாத்தானில், மகளிர் மருத்துவச்சாலை ஒன்றை மூன்றுலட்சம் ரூபாய் செலவு செய்து அமைத்திருக்கிறார்கள். கானாடுகாத்தானுக்கு அண்மையில் செட்டிநாடு என்னும் அழகிய நகர் ஒன்றை உண்டாக்கியுள்ளார்கள். பெண்கள் நலங்கருதிச் சென்னையில் இரண்டு லட்சம் ரூபாய்ச் செலவில் 'வெல்லிங்கடன்கிளப்,என்ற நிலையத்தையும் தில்லையம்பதியில், அந்த நகர மக்கள் கலந்து பழக, நகர மண்டபம் (Town hall) ஒன்றையும் நிறுவி வழங்கியுள்ளார்கள். பல திருக்கோயில் திருப்பணிகளுக்குப் பொருள் உதவிசெய்துள்ளார்கள்.

மதுரை, திருச்சிராப்பள்ளி, சென்னை, டேராடன்,டில்லி முதலிய இடங்களில் உள்ள பல கல்வி நிலையங்களுக்கும், பர்மாவிலும் கொழும்பிலும் உள்ள பல பள்ளிகளுக்கும் தளராது பொருள் உதவியுள்ளார்கள் இன்னும் எத்தனையோ அறநிலையங்களுக்கு இவர்கள் வழங்கியிருக்கும்தொகைகளை கணக்கிட்டால், அக் கால மதிப்பு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். இவ்வாருக இவர்கள் செய்த பலவகை அறங்களை எண்ணும்போது "மறத்தினால் ஆகிய மன்னரை போலாது, அறத்தினால் ஆய அரசே" என்று யான் இவர்களைப் பற்றி ஒருமுறை பாடியது நினைவில் வருகின்றது.

மீனாட்சி கல்லூரி

நம் அரசர் அவர்களுக்குக் கல்வியில்மிகுந்த ஆர்வம் உண்டு. இவர்கள், தம் தமையனார் இராமசாமிச் செட்டியார் நிறுவிய சிதம்பரம் உயர்நிலைப் பள்ளிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதுமுதல் ஒரு கல்லூரி நிறுவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்கள். முதலில், மதுரைக் கல்லூரிக்குப் பொருள் உதவி, அதனை உயர் நிலைக்குக் கொண்டுவர நினைத்தார்கள். கல்லூரிக்கு நிலம் வாங்கினார்கள். பின்னர் உண்டான மனமாற்றத்தால் சிதம்பரமே,கல்லூரி நிறுவத்தக்க இடம் என்று துணிந்தார்கள்.

தம் தமையனார் அமைத்த உயர் நிலைப்பள்ளிக் கட்டடத்திலேயே கல்லூரி தொடங்க முடிவு செய்தார்கள். அதற்குத் தம் அருமைத் தாயார் பெயரை வைத்து, மீனாட்சி கல்லூரி என வழங்கினார்கள். மீனாட்சி கல்லூரி, 24-6-20ல் தொடங்கப் பெற்றது. அதனை ஒரு முதல் தரக் கல்லூரியாக்கிப் புதிய இடத்தில் பெரியதாக அமைக்க வேண்டும் என்று அரசர் அவர்கள் கருதினார்கள். அதற்குரிய இடமாகச் சிதம்பரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே ஏறத்தாழ ஒன்றரைக் கல் தொலைவில் உள்ள திருவேட்களம் என்னும் சிற்றூரைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கே வேண்டிய கட்டடங்களும் அமைப்புக்களும் விரைவில் எழுந்தன; மாணவர் தொகை பெருகியது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அரசர் அவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்கும்,அமெரிக்காவுக்கும் சென்று வந்தவர்கள். ஆங்காங்குள்ள பல்கலைக் கழகங்களைக் கண்டதுமுதல் தமிழ் நாட்டில் ஓர் உடனுறை பல்கலைக்

கழகம் நிறுவவேண்டும் என எண்ணினார்கள், அதற்கேற்பத் தமது மீனாட்சி கல்லூரியையே பல்கலைக் கழகமாக வளர்த்தார்கள். தமிழ் நாடு செய்த தவப்பயனாக 1929 ஆம் ஆண்டுமுதல் மீனாட்சி கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகப் பொலிவுற்றது. அரசர் அவர்களின் பெயரால் அண்ணாமலை நகர் என ஒரு நகரமும் தோன்றியது. பல்கலைக் கழகத்திற்குப் பல வகைகளில் அரசர் அவர்கள் வழங்கிய நிதியின் அக்கால மதிப்பு அரைக் கோடி ரூபாய்க்குக் குறையாது. இதனை நிறுவுதற்கும் இதன் வளர்ச்சிக்கும் இவர்கள் மேற்கொண்ட பேருழைப்பு, விலை மதிக்க இயலாதது. இவர்களுக்கு முன்னும், இவர்களுக்குப் பின் இன்றுவரையும் ஆசியநாடுகளில் தனியாக ஒருவர் பல்கலைக் கழகம், நிறுவியதில்லை. உலகம் போற்றும் இப் பல்கலைக் கழகம், இவர்களின் பெருவண்மைக்கும், பெரும்புகழுக்கும் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. இவர்களின் பெயரைப் பொன் எழுத்துக்களால் பொறித்து, நாடு என்றும் போற்றும் என்பதில் ஐயமில்லை.

கணக்குப் பார்ப்பதில்லை நகரத்தார் என்று கூறியவர்

அம்மன் காசானாலும் ஆய்ந்துசெலவழிப்பவர்கள். ஆற்றிலே போட்டாலும் அளந்து போடுபவர்கள் நம் மரபினர். ஆனால் நம்மைக் கணக்குப் பார்க்காதவர்கள் என்று ஒரு பெரியவர் கூறியுள்ளார்.

அவர் கூறியவை:

"கோயில் வழியதாகக் குடிகளை அமைத்துக் கொண்ட ஒப்பற்ற நாகரிகம் இன்று நகரத்தார் சமூகத்தில்தான் நிலவுகிறது. அதனால் அச் சமூகத்தினர் திருக்கோயில்களுக்கு வழங்குவதில் கணக்குப் பார்ப்பதில்லை."

கூறியவர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

ஆதாரம்: நகரத்தார் மாநில மாநாட்டு மலர்.

பல்கலைக் கழக வெள்ளி விழா

இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா,9-2-1955ல் மைசூர் மாநில மன்னர் மாண்புமிகு செயசாமராச உடையார் பகதூர் அவர்கள் தலைமையில், பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்க மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் அண்ணாமலை அரசரின் உருவச் சிலையை மைசூர் மாநில மன்னர் அவர்களும், இராணி சீதை ஆச்சி மாணவர் இல்லத்தை அப்போது சென்னை மாநில முதல் அமைச்சராக இருந்த திரு காமராசர் அவர்களும் திறந்து வைத்தார்கள். வெள்ளி விழாப் பேருரையை டாக்டர் சர். ஏ. இலக்குமணசாமி முதலியார் அவர்கள் நிகழ்த்தினார்கள். சிறப்புப் பட்டமளிப்பு விழாவும், சென்னைக் கவர்னராக இருந்த ஸ்ரீபிரகாசா அவர்களால், டாக்டர் சர். இராமசாமி ஐயர் நூல்நிலையத்திற்குக் கல் நாட்டு விழாவும் நடைபெற்றன.

தாய் மொழிப் பற்று

தமிழ் மொழி வளர்த்தல் சிறப்பு நோக்கமாக இருத்தல் வேண்டும் என்று, அரசர் அவர்கள் நிறுவிய அண்ணாமலைப் பல்

கலைக் கழகத்தில், தமிழ்த்தாய் தனிச்சிறப்புற்று விளங்குகின்றாள்.

அரசர் அவர்கள், நாட்டிற் பெரும்புகழ் பெற்றிருந்த தமிழ்ப் புலவர்களைத் தம் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்களாக அமர்த்தினர். தமிழ் ஆராய்ச்சிக் கூடம் அமைத்துப் பெயர் பெற்ற அறிஞர்களை ஆராய்ச்சியாளர்களாக நியமித்தனர். தமிழுக்குப் பேராசிரியர் பதவியை முதலில் வழங்கினார்கள். தமிழில் புலவர் வகுப்பு, ஆசிரியப் பயிற்சி வகுப்பு, பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பு, எம். ஓ எல். வகுப்பு ஆகியவற்றை முதலில் தொடங்கிக் கற்பித்த பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது. இன்று நாட்டில் பல இடங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்று பட்டம் பெற்றவர்களைக் காண்கின்றோம்.

தமிழ்நாட்டின் இரு பெரும்புலவர் மணிகளாக விளங்கிய மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களுக்கும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கும் அரசர் அவர்கள் பொன்னாடை போர்த்துப் பெருமைப் படுத்தினார்கள். இது இவர்களுக்குத் தமிழ்ப் பெரும் புலவர்கள்பால் உள்ள பெருமதிப்புக்குச் சான்றாகும்.

தமிழ் இசைத் தொண்டு

தமிழிசை, தமிழர்களால் நன்கு பேணப்படாமல் நலிவுற்றது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் வேற்று மொழிப் பாடல்களே பாடப்பட்டன; பயிலப்பட்டன. அரசர் அவர்கள் இந்த இழிநிலையைக் கண்டார்கள், "தமிழில் பாடினால் அல்லவா தமிழ்மக்கள் பொருள் உணர்ந்து பாக்களைச் சுவைப்பர்" என்று எண்ணினார்கள். 1941 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், தமிழிசை நூல்கள் வெளியிடப் பதினாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். அதன் பின்னரும் பலபதினாயிரங்கள் உதவி யிருக்கிறார்கள். இவர்களுடைய இடையறாத முயற்சியாலும், ஆதரவாலும் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் இருபதிற்கு மேற்பட்ட தமிழிசை நூல்கள் வெளிவந்தன.

14-8-1941 ல் அண்ணாமலை நகரில், முதல் தமிழிசை மாநாடு கூடியது. பின்னர் எங்கும் தமிழிசை மாநாடுகள் நடைபெற்றன. அரசர் அவர்கள் தலைமை தாங்கி நடத்திய தமிழ் இசை இயக்கத்திற்கு எங்கும் ஆதரவு பெருகியது. ஆங்காங்குத் தமிழ் இசைக் கழகங்களும், கல்லூரிகளும் தோன்றின. புகழ் பெற்ற இசைவாணர்கள், இசை அரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களையே பாடினர். எதிர்ப்புக்கள் தோன்றி அடங்கின.

அரசர் அவர்களின் உதவியாலும் முயற்சியாலும், டாக்டர்சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் முதலாய தமிழ்ப் பெருமக்களின் ஆதரவாலும் பெரும் மூலதனத்துடன் சென்னையில் தமிழ் இசைச் சங்கம் நிறுவப் பெற்றது. அதன் சார்பில் ஆண்டு தோறும் தமிழ் இசைவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதை அறியாத தமிழர் இரார். அச் சங்கம், 1943 ஆம் ஆண்டுமுதல் இசைக் கல்லூரி ஒன்றையும், 1949 ஆண்டு முதல், பண் ஆராய்ச்சியையும் நடத்தி வருகின்றது. அண்ணாமலை அரசர் அவர்களுக்குப் பின் அவர்களுடைய குமாரர்களாகிய டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும், திரு. சிதம்பரம்

செட்டியார் அவர்களும் மேற்கொண்ட பெருமுயற்சியின் பயனைத் தமிழ் இசைச் சங்கத்துக்குச் சொந்தப் புதுப் பெருங் கட்டடம் ராஜா அண்ணாமலை மன்றம் என்னும் பெயருடன் சென்னையில் தோன்றியுள்ளது. இம் மன்றம், சென்னை நகருக்கே அணி செய்கின்றது. இச் சங்கத்தின் வெள்ளி விழா, அனைவரும் பாராட்டும் முறையில் 21-12-67ல் நடைபெற்றது. அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த பேரறிஞர் திரு.சி.என். அண்ணாதுரை அவர்கள் தலைமை தாங்கிச் சங்கத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாராட்டினார்கள்.

பட்டங்களும் பதவிகளும்

அரசர் அவர்களின் அரிய பணிகளைப் பாராட்டி, அரசாங்கத்தார், ராவ்பகதூர், திவான்பகதூர், சர் என்னும் பட்டங்களையும் பரம்பரை ராஜா பட்டத்தையும் இவர்களுக்கு வழங்கினர்; சென்னைப் பல்கலைக் கழகம், எல். எல். டி. என்னும் டாக்டர் பட்டத்தையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், டி. லிட். என்னும் டாக்டர் பட்டத்தையும் அளித்தன.

இவர்கள், மூன்று ஆண்டுகள் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ச்சியாகப் பதினைந்து ஆண்டுகள் டில்லி அரசாங்க சபை உறுப்பினராகவும் இருந்து மக்களாலும் அரசாங்கத்தினராலும் பெரிதும் பாராட்டப் பெற்றார்கள்; இந்திய இம்பீரியல் பேங்கின் கவர்னராகப் பத்து ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்கள்.

6 ஆம் ஆண்டு விழா

அரசர் அவர்கள் 61ஆம் ஆண்டு விழா, செட்டி நாட்டிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அப்போது பல்கலைக் கழகம், 1200 பக்க அளவில், விழா மலர் ஒன்றை அரசர் அவர்களுக்கு வழங்கியது. அரசர் அவர்கள் அந் நன்னாளில் பல வகை அறங்களுக்கும் வழங்கிய) தொகை, மூன்றரை லட்சம் ரூபாயாகும்.

பெரும் பிரிவு

இவ்வாறு மக்கள் பெறத்தக்க எல்லாப் பேறுகளும் பெற்று நல் வாழ்வு வாழ்ந்தவர்களும், பல செயல்கள் செய்த திரரும் ஆகிய தன்னேரில்லாத் தலைவர் நம் அண்ணாமலை வள்ளல் அவர்கள், தமது அறுபத்தேழாம் ஆண்டில் (15-6-1948 ல்) இறைவன் திருடியை அடைந்தார்கள். இவர்களின் புகழுடல் என்றும் நின்று நிலவும்.

உலகப் பெருமக்களுள் ஒருவராகிய இவர்களின் பண்புகளையும், குறிக்கோள்களையும் அறிந்து பின்பற்றுதல், நல்வாழ்வு வாழ்வார்க்கு இன்றியமையாதது.

பண்புகளும் குறிக்கோள்களும்

அரசர் அவர்கள், கருமமே கண்ணாக இருந்து கடமைகளைச் செய்து முடிப்பார்கள். குறிப்

நகரத்தார் நாட்டின் நான்கு எல்லைகள்?
பக்கம்-24

பேடும் எழுதுகோலும் இவர்களிடம் எப்போதும் இருக்கும். உறங்கும்போதும் அவை பக்கத்தில் இருக்கும். தமிழிலும் ஆங்கிலத்திலும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதுவதிலும் பேசுவதிலும் இவர்கள் வல்லவர்கள். இவர்களின் வாழ்நாளில் ஒரு நொடிப் பொழுதும் வீணுகக்கழிந்ததில்லை. மறவாமைக் குணம், இவர்கள் பால் சிறப்பாக அமைந்திருந்தது. இவர்கள் ஒரு செயலைச் செய்வதாக எளிதில் சொல்லமாட்டார்கள். சொன்னுல், அது எத்தனை அரியதாயினும் அதனைச் செய்து முடிக்காமல் விடமாட்டார்கள். விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் இவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. தம் தந்தையார் செல்வத்திலிருந்து சில நூருயிரம் ரூபாய்களைப் பிரித்துக்கொண்ட நம் அரசர், பல கோடியளவினதாகிய பெருஞ் செல்வத்தைத் திரட்டியதற்குக் காரணம், வாணிகத்துறையில் இவர்கள் மேற்கொண்ட அயரா உழைப்பே யாகும். அரசர் அவர்கள் திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள்.

இவர்கள் வாழ்க்கையின் குறிக்கோள், பின் வருமாறு இவர்கள் எழுதியிருப்பதனுல் புலனுகும்.

"ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன். அண்ணுமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்கவேண்டும் என்பது எனது ஆவல். ஈட்டலும்காத்தலும் வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை.,,

அரச குடும்பம்

நம் அண்ணுமலை அரசர் அவர்களின் மக்கள் எழுவராவர். அவர்களில் ஆண் மக்கள் மூவர். பெண் மக்கள் நால்வர். இவர்களுள் மூத்த குமாரரான டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களை நாடு நன்கு அறியும். பல்கலைக் கழகத்தையும் தமிழ் இசைச் சங்கத்தையும் உருவாக்குவதில் இவர்கள் தம் தந்தையாருக்கு மிகவும் உதவியாக இருந்தவர்கள்; மாசு மறுவற்ற உள்ளம்உடையவர்கள்; எண்ணிய எண்ணியாங்கு நிறைவேற்றும் அறிவாற்றல் படைத்தவர்கள்; ராஜா அண்ணுமலைபுரத்திலும் காந்தி நகரிலும் தம் பெயராலும் தம் வாழ்க்கைத் துணைவியார் இராணி மெய்யம்மை ஆச்சி அவர்கள் பெயராலும் மூன்று உயர் நிலைப் பள்ளிகளை நிறுவியும் செட்டி நாட்டில் அண்ணுமலைப் பொறியியற் பல்கலைப் பள்ளியும் (Polytechnic) அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் முத்தையா பொறியியற் பல்கலைப் பள்ளியும் நிறுவியும் கலைவளர்த்து வருகின்ற வள்ளல்; சென்னை நகரின் முதல் மேயர் இவர்களே.

இவர்கள், தம் தந்தையாருக்குப் பின், அண்ணுமலைப் பல்கலைக் கழக இணைவேந்தராய்ப் பல்கலைக் கழக வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிருர்கள். இவர்கள் காலத்தில் பல்கலைக் கழகத்தில் பல கல்விப் பகுதிகள் தோன்றியுள்ளன; அழகிய பெரிய கட்டடங்கள் பல உருவெடுத்துள்ளன. பல்கலைக் கழக வெள்ளி விழா, அனைவரும் பாராட்டும் முறையில் தனிப்பெருஞ் சிறப்பாக நடைபெற்றதற்கு முதற்காரணம், இவர்களுடைய இடைவிடாப் பெருமுயற்சியே என்பது எல்லாரும் அறிந்த செய்தியாகும்.

தமிழ் நாட்டின் தனிப்பெருந் தவப் புதல்வராகிய இவர்களும் இவர்களின் துணைவியார் திருமிகு இராணி மெய்யம்மை ஆச்சிஅவர்களும், இவர்களின் குடும்பத்தினரும் மேலும் மேலும் அறம் பல புரிந்து, நீடூழி நல்வாழ்வு வாழ்க என வாழ்த்துவோமாக.


நின்று வளர்க நிலைத்து

வலம்புரி அண்ணாமலை

அண்ணாமலையார் அவர்கள் [வித்துவான் வே. அண்ணாமலை] வலம்புரி என்ற வலையபட்டியைச்சேர்ந்தவர்கள். முறையாகத் தமிழ் பயின்றவர்கள். மிக எளிதாகவும். இனிமையாகவும் எழுத இயலும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர்கள். இலக்கியத் திறனாய்வு நூல்களும், சிறுவர்க்கேற்ற எளிய கதை நூல்கள் பலவும் எழுதியுள்ளார்கள். கவிதை எழுதும் திறமை மிக்கவர்கள். புத்தகத் தொழிலில் நிறைந்த அனுபவம் உள்ளவர்கள்.

நகரின் அடிப்படையில் நாகரிகம் தோன்ற
நகரை உருவாக்கி நாகரிகம் கண்டநல்
நாக ரிகத்தார் நகரத்தார் என்றுசொலின்
ஏக மனதாக ஏற்கின்ற உண்மையது;
சீர்மேவும் நல்லறங்கள் செய்யும் நகரத்தார்
பார்மேவும் நற்பெருமை பாவெல்லை தாண்டிடுமே!
பாவால் அளவிட்டுப் பாட முயன்றாலும்
நாவால் அளவிட்டு நான்பாடும் ஆற்றலிலேன்;
தொண்ணூறும் ஆறும் தொகைகொண்ட ஊர்களிலே
விண்ணூர் மதிதவழ வீடுகட்டி வாழ்ந்திடுவோர்;
ஒன்பது கோயிலார் உட்பிரிவும் தாமுடையார்;
மன்பதைக்குத் தொண்டுசெயும் மாண்பார் திருவுடையார்;
முத்தமிழின் தெய்வம் முருகன் திருவடியை
நித்தமும் போற்றும் நெடிய தவமுடையார்;
சைவம் தழைக்கத் தமிழ்தழைக்க அன்போடு
செய்யும் செயலில் சிவமயத்தைக் கண்டிடுவார்;
எண்ணூறும் வண்ணம் இலங்கும் வளமுடைய
தண்ணூறும் செந்தமிழைத் தாலாட்டிப் போற்றித்
திரைகடலைத் தாண்டித் திரவியங்கள் தேடிக்
கரைகடந்த தர்மங்கள் காசினியில் செய்திடுவார்;
அன்னவர்தம் ஏடிதுதான்; அன்பார் நகரத்தார்
மன்னவர்தம் காப்பால் மலைவிளக்காய் நின்றொளிர்ந்து
என்றும் வளரும் இயல்புடைய வட்டியைப்போல்
நின்று வளர்க நிலைத்து.

தொழில் வளர்த்த தோன்றல்



எம். வி எம். அழகப்பன், எம். ஏ..

[அழகப்பா அவர்களின் சொந்த ஊர் பள்ளத்தூர். அவர்கள் நல்ல பேச்சாற்றலும், எழுத்தாற்றலும், கலை ஆர்வமும் நிறைந்த துடிப்பு மிக்க இளைஞர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சமூக சேவைத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்கள்.

பிரிட்டிஷ்-அமெரிக்க நாட்டு சமூக சேவை மன்றங்கள், அகில உலக முன்னேற்றச் சங்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழக அகாடமிக் கவுன்சில் ஆகியவற்றில் கடந்த ஆறு ஆண்டுகளாக உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார்கள்.

இப்பொழுது, ஆர் வோ பிலிம்ஸ் ஈஸ்டர்ன் யூனிட் நிறுவனத்தின் சென்னை அலுவலகத்தில், பொறுப்பாளராகப்பணி புரிந்து வருகிறார்கள்.]

பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற...என்ற மறை வழியினைத் தம் வாழ்க்கையிலே சண்டவர் திரு. திவான்பகதூர் அ. மு. முருகப்பச் செட்டியார் அவர்கள். பண்புடையமக்கட்பெறின் என்ற வள்ளுவர் வாக்கின்படி, பல தலைமுறைகளுக்கு, அவர்களுடைய நல்ல செயல்கள் சமுதாய வளர்ச்சிக்கு வேண்டியன யாவையும் ஈர்க்கும் என்பது நமது அனுபவ வாயிலாக, திரு. முருகப்ப செட்டியாரது குடும்பத்தினரைப் பார்க்கும் பொழுது சொல்லாமல் யாரும் உணர வாய்ப்பிருக்கிறது.

தமிழ் நாட்டின் தொழில் வளமும், அதனுடைய வளர்ச்சியும் பள்ளத்தூர் அ. மு. மு. குடும்பத்தினருடைய வளர்ச்சியினை ஒட்டி இருக்கின்றது என்றால் மிகையாகாது. திவான் பகதூர் முருகப்பச் செட்டியாரின் ஈதல் இசைபட வாழ்ந்த குண இயல்புகளை அவருடன் ஒன்றிப் பழகிச் செயல் புரியும் வாய்ப்புக் கிடைத்த என் தந்தையின் மூலம் கேட்டறிந்த பொழுது, இந்தக் குடும்பம் இன்னும் பல தலைமுறைகளுக்குச் சமுதாயப்பொருளாதார வளர்ச்சிக்கு ஆவன செய்ய இருக்கின்றது என்பதனை, எந்தவகை ஐயப்பாடுமில்லாமல் என்னால் உணரமுடிகிறது.

திவான் பகதூர் முருகப்பாவின் முதல் மைந்தராக 23. 1. 1902ஆம் தேதியன்று தொழில் வல்லுநர் திரு. முருகப்பர் பிறந்தார். செட்டி நாட்டு வழக்கப்படி இளமையிலே வேண்டிய அளவு கல்வியறிவினைப் பெற்றவுடன், குடும்பத்துச் சொத்துக்களைப் பராமரிக்கும் வாய்ப்பாகக் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்றதோடு மட்டுமல்லாமல், அங்கங்கே புதுமையான தொழிற்துறைகளை ஆராய்வதற்கு வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம், தமது தம்பிகள் திரு. வெள்ளையரோடும், திரு. அருணாசலத்தோடும் கலந்து உரையாடி, நம் நாட்டிலேயே, பிறந்த மண்ணிலேயே அதனைக் கொண்டு வந்து நிறுவ எண்ணம் கொண்டார். புதுமைப் போக்கினை விரும்பிய இளவல்களுக்கு என்றைக்குமே எதனையுமே மறுத்ததில்லை பெரியவர். செட்டி நாட்டிலே குலத் தொழிலை விட்டு, பிற தொழிலை ஏறெடுத்துப்பார்த்தறியாதகாலத்திலே, தமது 28ஆவதுவயதிலேயே உலகத்தினைச் சுற்றி வரும் வாய்ப்பினைப் பெற்ற திரு. முருகப்பர் பொருளாதாரவளத்திலே இந்திய நாடு பின் தங்கியுள்ளமைக்குக் காரணம், இயந்திர வசதி கொண்டு தொழில் வளத்தினைப் பெருக்குவதில் அற்றை நாளிலே ஒருவரும் ஊக்கமுடன் செயல்படவில்லை என்பதனை உணர்ந்தார். அவருடைய எண்ணங்களைச் செயலாக மாற்ற அவர் தம்பிகள் உடனிருந்தனர். ஊக்கத்திற்கு உறைவிடமாக இருந்த அவருடைய தம்பி திரு. வெள்ளையனாரைப் பற்றிய எண்ணம் வரும் பொழுதெல்லாம் என்னுடைய தந்தை கூறியவை நினைவுக்குவருகின்றன. இற்றைக்குப் பர்மாவில் செட்டி நாட்டுக்குச் சொந்தமான சுமார் 100 கோடி ரூபாய்க்குமேல் இருக்கும்


"நகரத்தார்" பற்றி முதலமைச்சர்

'செட்டி மக்கள் கெட்டி மக்கள் என்று சொல்வார்கள். அது முற்றிலும் சரியானது என்றே கருதுகிறேன். இக் கலைக் கழகத்திற்கு நகரத்தார் கலைக் கழகம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நகரத்தார் என்ற சொல் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் வகுப்பினரைக் குறிப்பதுடன், நகரத்தில் வாழ்பவர்கள் என்பதையும் குறிக்கும். எனவே நாங்கள் இனப் பெயரால் இக் கழகத்தைத் தொடங்கவில்லை—நகரத்தில் வாழ்பவர்களுக்காகத் தொடங்கியுள்ளோம் என்று சொல்லிக் கொள்ளும் வகையில் மிகச் சாதுரியமாகப் பெயர் வைத்திருக்கிறார்கள்.'

நகரத்தார் கலைக் கழக முதல் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் உரையாற்றியபொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.

சொத்துக்கள் ஒரு வெள்ளையனூர் இன்று உயிரோடு இருந்தால் போதும் இந்திய அரசாங்கத்திற்கு அதனுடைய கடமை என்னஎன்று சுட்டிக் காட்டத் தயங்கமாட்டார் என்பது மட்டுமல்ல, ஓரளவு வெற்றியும் தேடித் தந்திருப்பார் என்ற நம்பிக்கை எனது தந்தைக்கு என்றைக்கும் உண்டு.

அத்தகைய கடமையுணர்வுமிக்க தம்பிகளுடன் தொழிற் துறையில் முதல்முயற்சியினை Ajax என்ற நிறுவனத்தின் மூலம் செயலாக்கத் தொடங்கினுர்.



தொழில் மேதை முருகப்பா

இன்றைக்குத் தமிழகம் தொழிற் துறையில் எந்த ஒரு மாநிலத்திற்கும் தாழ்ந்ததில்லை என்று பெருமையுடன் கூறிக் கொள்வதற்கு அடிப்படையாக இருக்கின்ற அம்பத்தூர், அகில இந்திய நிலப்படத்திலே முக்கியமானதொரு இடத்தினைப் பெறுவதற்கு காரணம். 'சைக்கிள்' தொழிற்சாலை என்ருல் யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். இதனுடைய வித்து, திரு. முருகப்பரது முயற்சியின் விளைவு என்பதனை இன்றைய இந்தியத் தொழில் மேதைகள் யாவரும் ஒப்புக் கொள்வர். அடிமைத்தளை அகன்ற நிலையிலே நாட்டின் பொருளாதாரக் குறைபாடுகளை ஆராய்ந்தவர்கள் கண்ட முடிவின் படி வளம் படைத்த நாட்டினை உருவாக்குவதற்கு அடிப்படைத் தேவை தொழிற் துறையிலே முன்னேற்றம் என்ற நியதியினை உணர்ந்த திரு. முருகப்பனுர்,

அவர்களுடைய குடும்பத்தோடு சிறந்த, நெருங்கிய நண்பராகத் திகழுகின்ற திரு. A. இராமசாமி முதலியாரின் அறிவாற்றலைப் பயன்படுத்தி, உலகத்திலேயே தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்ருன (Tube Investments Ltd Birmingharm) உடன் ஒப்பந்தம் செய்து, T I cycle கம்பெனியைத் தொடங்கினுர்கள். ஆலமரம் விழுது விட்டு நிற்பதைப் போலச் சைக்கிள் தொழிலை மையமாகக் கொண்டு இயங்கும் பற்பல தொழிற்சாலைகளைத தன் பக்கத்திலே கொண்டு செயலாற்றும் இந்தப் பெரிய நிறுவனம் இற்றைக்கு இந்தியாவிலேயே ஒரு தலைசிறந்த நிர்வாகத்தினை உடைத்தாயிருப்பதற்கு அடிப்படை திரு. முருகப்பனுரது கடுமையான உழைப்பு என்பது குறிப்பிடத் தக்கது.

அம்பத்தூரிலே தொழிற் பேட்டைகள் பல தொடங்கப் பெற்ருலும், T. I. cycle தொழிற்சாலைக்கு மிகத் தேவையான பொருள்களைத் தரும் சிறிய பெரிய தொழிற் கூடங்கள் உருவாவதற்குக்கூட திரு. முருகப்பனுரது பரந்த நோக்கம் காரணம் என்பது வலியுறுத்தத் தக்கது. தான் வாழ்ந்து, பிறரும் வாழ வழி செய்யும் பொழுதுதான் மனிதன் மனிதனுக வாழ ஆரம்பிக்கிருன் என்பது பெரியோர்களது வாக்கு. அதற்கேற்பத் தம்மிடம் ஆலோசனை கேட்டவர்களுக் கெல்லாம் உடனிருந்து உதவி செய்து அவர்களை யெல்லாம் இன்று தொழில் வல்லுநர்களாக ஆக்கிய பெருமையும் திரு. முருகப்பனுரையே சாரும். WRIGHT SADDLES MILLER DYNAMO தொழிற்சாலைகளையும் இதே நிறுவனத்தின் கீழ்க்கொணர்ந்து எல்லாதொழில்களையும் TUBE INVESTMENTS OF INDIA Ltd என்ற நிறுவனத்தின் கிளைகளாக ஆக்கி, அதனுடைய விதியினை நிர்ணயிக்கும் பொறுப்பையும் அன்றிலிருந்து இன்றுவரை திரு. A. இராமசாமி முதலியார் அவர்களிடம் தந்திருக்கின்றனர்.

சென்னை மாநகரத்தின் வட மேற்குப் புறம் தொழிற்பேட்டைகள் விரிவடையக் காரணம் அ.மு., மு. குடும்பத்தினர் என்று சொன்னுல், அதுகூட அவர்களைக் குறைவாக மதிப்பிட்டதாகத்தான் ஆகும். காரணம் திருவொற்றியூரினைக் கொண்டிருக்கும் வட கிழக்குப் புறமும் இந்தக் குடும்பத்தாரின் சீரிய முயற்சியினுல்தான் இன்றைக்குத் தமிழகத்தை நோக்கிப் பல வட நாட்டவரும், ஏனைய

நகரத்தார் நாட்டின் நான்கு எல்லைகள்

வெள்ளா றதுவடக்காம்; மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வைகை தெற்காகும்-ஒள்ளியசீர்
எட்டிக் கடல்கிழக்காம்; இஃதன்ருே நாட்டரண்சேர்
செட்டிநாட்டு எல்லையெனச் செப்பு.

—பாடுவார் முத்தப்ப செட்டியார்

மாநிலத்தாரும் வந்து, தங்கள் தொழிற்சாலைகளை எண்ணூரிலும் திருவொற்றியூரிலும் அமைத்துக் கொண்டிருக்கின்றனர்.

திருவொற்றியூரின் வளர்ச்சிக்கு மையமாக இருக்கும் கார்பொராண்டம் யூனிவர்சல் என்ற உப்புத்தாள், சாணைக் கல் தயாரிக்கும் நிறுவனம், அமெரிக்க நாட்டிலே அதே பெயரிலே பிரபலமாக இருக்கும் நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப் பெற்று, அதனுடைய வளர்ச்சிக்கு Universal Grinding Wheel Company என்ற இங்கிலாந்து நாட்டு நிறுவனத்தின் உதவியினையும் பெற்று, திரு. முருகப்பரது செயலாற்றல்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாக இன்றைக்குச் செயல்பட்டு வருகிறது.

திரு. முருகப்பனரது சேவை தொழில் வளர்ச்சியில் மட்டுமின்றி, செட்டி நாட்டுக் குலத் தொழிலான, Bankingலும் பயன்படுத்தப்பட்டது என்பதற்குச் சான்று அவருடைய அறிவுத் திறன் Madras Industrial Investment Corporationல் டைரக்டராக மட்டுமின்றி, அதனுடைய தலைவராகவும் அவர் செயல்பட வாய்ப்பினைத் தந்தது என்பதனை அவரை யறிந்தோர், என்றுமே மறக்க இயலாது.

இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட பெருமகனை இந்திய அரசும், State Bank of Indiaல் டைரக்டராக ஆக்கிப் பெருமையினைத் தேடிக் கொண்டது. இவருடைய பண்பு, செயல் திறன்முதலியவற்றை நன்கு அறிந்த Bank of India நிறுவனமும் இவரைத் தங்களுடைய Director ஆக ஆக்கிக் கொண்டது. திரு. முருகப்பனரது அருமையினை உணர்ந்த காரணத்தால்தான் தொடங்கிய நாள் தொட்டு வெள்ளையரே தலைமைப் பதவியினை வைத்துக் கொண்டிருந்த நிலையினை, Madras Chamber of Commerceல் மாற்றியமைத்து, முதல் இந்தியத் தலைவராகத் திரு. முருகப்பனரை ஏற்றுக் கொண்டார்கள். கேட்டார்ப் பிணிக்குந் தகையவராய, சொல் வன்மையினைத் திரு. முருகப்பனர் பெற்றிருந்த காரணத்தால்தான் இப்படிப் பல பொது நலக் குழுக்களில் செயலாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

தன்னலம் மறந்து, பிறர் நலம் பேணி வாழும் பொழுதுதான் மனிதன் தெய்வமாகக் கருதப்படுகிறான். இந்த உண்மையினை, திரு. முருகப்பரால் இயற்றுவிக்கப்பட்ட பல நல்ல தர்ம நிலையங்கள் சான்றாக இருந்து,விளக்குகின்றது. நகரத்தார் ஈன்றுவக்கும் கலையில் தொன்றுதொட்டுச் சிறந்துவிளங்கினார்கள் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே பள்ளத்தூரிலே திரு. அ. மு. பெரிய முருகப்ப செட்டியாரால் தோற்றுவிக்கப்பட்ட மருத்துவ நிலையம். அதனுடைய அருமை அந்த ஊரிலிருப்பவர்களுக்கு மட்டுமல்ல, செட்டி நாட்டில் பல ஊர்களில் வாழும் மக்கள் பலருக்கும் நன்கு அறிந்த ஒன்று. திரு. முருகப்பனரால் தோற்றுவிக்கப்பட்ட பல கல்விக் கூடங்களுக்கும், மருத்துவ நிலையங்களுக்கும், இந்தத் தரும மருத்துவ நிலையம்தான் வித்தாக இருந்து உதவியிருக்கின்றது. திரு. அ. மு. குடும்பத்தாரால் செய்யப்பட்டு வரும் தருமங்களில், விளம்பரம் சிறிதும் இல்லாமல் நடந்து வருவது மாயவரத்திலுள்ள அவர்களுடைய பாடசாலையாகும்.

இங்கு, பல செட்டிநாட்டுமாணவர்கள், உதவிப் பணமும், உணவு வசதியும் கிடைத்து உயர் கல்வி

பெற வாய்ப்புக்களைத் தந்திருக்கின்றார்கள். நம் நாட்டு மாணவர்களில் சிறந்த முறையில் படிக்க ஆர்வமுள்ளவர்கள், ஆனால் அதே சமயத்திலே வசதிக் குறைவானவர்கள் இந்த வாய்ப்பினைப் பயன் படுத்திக் கொள்ளலாம். அவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

A. M. M. Charities
"Chammundeeswari Bagh"
Madras—4.

இத்தகைய சிறந்த அறச் செயல்களைச் செய்து வருவதில் திரு. அ. மு. மு. குடும்பத்தாருக்குச் செட்டி நாடும். ஏன்! தமிழ் நாடும் தலை தாழ்த்தி நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளன. திரு. முருகப்பனாரால் தோற்றுவிக்கப் பட்ட தர்ம காரியங்களைச் சுருக்கமாகக் கூற வேண்டுமானால்,

MURUGAPPA HALL
at
"Alagappa Campus"
Karaikudi

A. Ramaswamy Mudaliar
High School
at- Ambathur

A. M. M. Vellayan Chettiar
High School
at-Thiruvothiyur

Sir Ivan Stedeford
Hospital
at-Ambathur

என்று வரிசைப் படுத்திக் கூறிக் கொண்டே செல்லலாம். திரு. முருகப்பனாரது சேவைகளை மறக்காது அவர்கள் குடும்பத்தாரும், அவருடைய நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் "Murugappa Chettiar Memorial Polyetechnic" என்று ஆவடியில் தொடங்கித் தொழில் கல்வியில் மாணவர்களை மேலும் ஈடுபடச் செய்ய வசதிகள் செய்திருக்கின்றனர். அவருடைய எண்ணம்போல வாழ்ந்து 'உலகத்தார் உள்ளத்துள் எலாம் உளன்' நின்ற நிலையினைப் பெற்றிருக்கும் திரு. முருகப்பனாரது நினைவினை நாம் என்றும் போற்றிப் பேணிச் செயல் புரிவோமாக.

அயலூர் நகரத்தார்

அ. லெ. நடராசன்

[திரு. அ. லெ. நடராசன் அவர்களின் சொந்த ஊர் காரைக்குடி. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் எழுத்துத் துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். பதிப்பகத் துறையில் நம் மரபினருக்கு முன்னோடியாக இருந்தவர்களில் இவர்களும் ஒருவர் ஆவார்கள். காந்தியடிகள், இராஜாஜி, கவிமணி, டி. கே. சி, கல்கி, முதலியவர்களின் நூல்களை மிகச் சிறப்பான முறையில் பதிப்பித்த பெருமைக்குரியவர்கள். சிறுவர் நூல்கள் முதல் வரலாறு, புராணம், இதிகாசம் முதலிய பல்துறை நூல்களையும் மிக எளிய முறையில் எழுதியுள்ளார்கள். ஸ்ரீமத் பாகவதம், வியாசர் அருளிய மகாபாரதம், வால்மீகி ராமாயணம், ஏசுநாதர், நபிகள் நாயகம், புத்தர் முதலிய நூல்கள் இவர்களால் எழுதப்பெற்றுள்ளன. மேற்குறித்த நூல்களுக்குக் காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள், போப்பாண்டவர், அனைத்திந்திய முஸ்லிம் லீக் தலைவர், அறிஞர் அண்ணா முதலியோர் ஆசி உரைகளும் முன்னுரைகளும் வழங்கியுள்ளார்கள்.]

[கடல் கடந்த நாடுகளில் வாழுகின்ற நம் மரபுப் பெருமக்கள் பற்றிய கட்டுரைகளின் தொடக்கமாக, இக் கட்டுரை இடம் பெறுகின்றது—ஆசிரியர்]

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்பதை ஒரு அமுதவாக்காகக் கொண்டு நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் அணித்தே இருக்கும் பல அயல் நாடுகளுக்குப் பொருள் ஈட்டச் சென்றார்கள். பர்மா, மலேயா, ஜாவா, சுமத்திரா, சயாம், சைகோன், சிலோன் முதலிய நாடுகளில் வட்டித் தொழில் நடத்திப் பொருள் ஈட்டினார்கள்.

இப்படிப் பொருள் ஈட்டச் சென்ற குடும்பங்களில் எத்தனையோ புகழ்பெற்ற குடும்பங்கள் உண்டு. அவற்றில் மகிபாலன்பட்டி, சி. ராம. ராமசாமி செட்டியார் அவர்கள் குடும்பமும் ஒன்று.

மகிபாலன்பட்டி என்னும் பெயரைச் சொன்னதுமே, தமிழ் மக்கள் உள்ளத்தில் இயல்பாகவே இரு பெருமித உணர்ச்சிகள் தோன்றுவது உண்டு.



சி. ராம. ராமசாமிச் செட்டியார்

ஒன்று, தென் தமிழிலும் வட மொழியிலும் புலமை பெற்றுப் புகழுடன் விளங்கிய மகாமகோ பாத்தியாய பண்டிதமணி கதி ரேசச் செட்டியார் அவர்களைப் பற்றியது.

மற்றொன்று, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புற நானூற்றுப் பாடலைப்பற்றியது. பெருமைமிக்க இந்தப் புறநானூற் றுப் பாடலைப் பாடிய புலவர் மணியின் பெயர் கணியன் பூங் குன்றனார் என்பது,. மகிபாலன் பட்டிப் பிரதேசம் முற்காலத் தில், பூங்குன்ற நாடு என்னும் பெயரில் விளங்கி வந்தது.

பழைமைப் புகழும் புதுமைப் புகழும் ஒருங்கே பெற்ற மகிபாலன் பட்டியில் திருசி. ராம ராமசாமி செட்டியார் அவர்கள் பிறந்தார்கள்; மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையிலும், பண்டித மணி கதிரேசச் செட்டியார் அவர் களிடத்திலும் தமிழும் சைவமும் பயின்றார்கள்.

இவர்களின் முன்னோர்கள் நகரத்தார் குலமரபுப்படி, கடல் கடந்து மலேயா சென்று, ஈப்போ வில் கடைவைத்துத் தொழில் நடத்தி வந்தார்கள். அந்தத் தொழிலைத் தொடர்ந்து கவனிக் கும் பொருட்டு, 'ராம' அவர்கள் மலேயா சென்றார்கள்.

மலேயா நாடு பல இனத்த வர்களை—பல சமயத்தவர்களைக் கொண்ட நாடு. அந்த நாட்டில் சீனர்கள், மலேயர்கள், இந்தியர் கள், சிங்களவர்கள், ஆங்கிலேயர் கள் ஆகியோர் வசிக்கின்றார்கள்.

பல்வேறு மதத்தவருடனும், பல் வேறு இனத்தவருடனும், நல்ல முறையில் கலந்து பழகித் தாங்கள் செல்லும் நாடுகளில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தொழில் நடத்தி வந்திருக்கிறார் கள்.

அந்த மரபு வழுவாது நடந்து கொள்வதில் நண்பர் சி. ராம. ராமசாமி செட்டியார் அவர்கள் மிக்க திறமைசாலி. அவர்களுக்குச் சீனர்களிடையே நண்பர்கள் உண்டு; மலாயாக்காரர்களி டையே நண்பர்கள்உண்டு; ஜப்பா னியர்களிடையே நண்பர்கள் உண்டு; இந்தியர்களிடையே நண் பர்கள் உண்டு.

அத்தகைய நட்பின் பயனாய் நண்பர் ராம அவர்கள் உலகஅறிவு முதிரப் பெற்றார்கள். அதனால் அவர்களுக்கு ஏழை எளியவர்களு டனும் நன்கு பழகத் தெரியும்; செல்வச் சீமான்களோடும் கலந்து பழகத் தெரியும்.

இதனால் மலாயா நாட்டில் இருக்கும் போது நண்பர் சி. ராம அவர்கள் பல பொது நிறு வனங்களில் சேர்ந்து கொண்டு பொதுத் தொண்டு புரிந்து இருக் கிறார்கள். நாட்டுக்கோட்டை

நகரத்தார் சங்கத் தலைவராகவும் இந்தியன் காங்கிரஸ் பேராக் கிளைத் தலைவராகவும் இருந்து பணிபுரிந்து இருக்கிறார்கள்.

தொழில் புரிவோர் எவரும் அந்தந்த நாட்டு மக்களுடனும் அரசாங்கத்துடனும் இணங்கி வாழ்வது இயல்பு. இந்த இயல்பு நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரிடையே மிகுதியாக உண்டு. இதை நண்பர் சி. ராம அவர்கள் இயற்றி இருக்கும் கீழ் வரும் பாடலால் நாம் அறியலாம்.

பொய்யாத நெஞ்சுடையோம்
புவியரசற் கன்புடையோம்
செய்யாதன செய்யோம்
செய்ந்நன்றி மறந்தறியோம்
வையகத்தில் வாழ்வாங்கு
வாழும் வழியறிவோம்
ஐயாஉன் ஆணைநின்று
அரசியலின் வழிநடப்போம்.'

மலேசியா நாட்டுப் பிரதமர் தொங்கு அப்துல்ரஹ்மான் அவர்களை வாழ்த்தித் திரு சி. ராம அவர்கள் பாடியிருக்கும் பாடல்களில் மேலே குறிப்பிட்டுள்ள பாடலும் ஒன்று.

சி. ராம அவர்களுக்குத் தமிழிலும் சைவ சமயத்திலும் மிகுதியான ஈடுபாடு உண்டு; விருந்தினரை உபசரிப்பது அலாதியான ஒரு தனிக் கலை. அதில் ராம அவர்களுக்கு நல்ல தேர்ச்சி உண்டு.

வித்தும் இடல்வேண்டும்
கொல்லோ விருந்துஓம்பி
மிச்சில் மிசைவான் புலம்

என்பது வள்ளுவர் வாக்கு.

இந்தத் திருக்குறளுக்கு நண்பர் சி. ராம அவர்கள் சிறந்த ஓர் எடுத்துக் காட்டு.

மலரும் உள்ளம்



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

[குழந்தைக் கவிஞர் அவர்கள் ராயவரத்தைச் சேர்ந்தவர்கள். தேனான பாடல்கள்மூலம் தெவிட்டாத முறையில்குழந்தை உள்ளங்களில் நீதியை வளர்க்கும் பணியைக் கவிமணி அவர்களுக்குப் பிறகு விரிவான முறையில், தெளிவான வகையில் செயலாக்கிய பெருமை குழந்தைக் கவிஞர் அவர்களையே சேரும். கடந்த 25 ஆண்டுகளாகக் கவிஞர் அவர்கள் இடைவிடாது குழந்தை இலக்கியப் பணிபுரிந்து வருகிறார்கள். 1950 ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு என்று சங்கம் ஒன்றை நிறுவினார்கள். அதில் பல ஆண்டுகள் தலைவராகப் பணியாற்றியுள்ளார்கள். இவ்வாண்டு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார்கள். 1966ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றிஉள்ளார்கள்.1963ஆம் ஆண்டு வள்ளியப்பரின் கவிதைச் செல்வங்களைப் பாராட்டி ஜனாதிபதி ஜாகீர் ஹுசேன் அவர்கள் வெள்ளிக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்கள். குழந்தை இலக்கியத்திற்குக் கவிஞர் அவர்கள் செய்துள்ள சேவை குறிப்பிடத்தக்க சிறப்புமிக்கதாகும்.]

அப்போது, ஐந்தாவது படிவத்தில் அழகப்பன் படித்துக் கொண்டிருந்தான். நன்றாகப் படிக்க வேண்டும்; பெரிய பட்டதாரியாக வேண்டும் என்ற ஆசை அவனுக்கு அதிகம்.

இந்தச் சமயத்தில் "படித்தது போதும்; புறப்படு மலேயா நாட்டிற்கு. அங்குள்ள நம்முடைய வட்டிக் கடையில் தொழில் கற்றுக் கொள்ளலாம். பரம்பரைத் தொழிலை விடக்கூடாது" என்று ஒரு கடிதம் வந்தால் எப்படி இருக்கும்? அழகப்பனுக்கு மலேயா நாடு செல்ல மனமே இல்லை. ஆனாலும் என்ன செய்வது! தந்தையின் கட்டளையை மீற முடியவில்லை.

வெள்ளி விழா ஆண்டுத் திருமணம்

இச் சிறப்பிற்குரியவர் வள்ளல் அழகப்பரின் மகள் உமையாள் இராமநாதன் அவர்கள்.

அவர் கருத்துக்கள் 'ஆச்சிகள் உலகம்' பகுதியில் இடம் பெற்றுள்ளன.

மலேயா செல்வது நிச்சயமாகிவிட்டது. சென்னையிலிருந்து குறித்த நாளில் கப்பல் புறப்பட்டது. நாகப்பட்டினம் வழியாகத்தான் அந்தக் கப்பல் போவது வழக்கம். சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பலில் அழகப்பன் கவலையோடு உட்கார்ந்திருந்தான். 'பெரிய படிப்பெல்லாம் படிக்க வேண்டும். பட்டதாரியாகவேண்டும் என்று மனக் கோட்டை கட்டினேம். இப்படி அக்கோட்டை அடியோடுதகர்ந்து விட்டதே! பத்தாவதுவரைகூடப் படிக்க முடியாமல் போய்விட்டதே!' என்று நினைத்து நினைத்து வருந்தினன்.

அவன் உள்ளம் வாடியது; உடலும் வாடியது; கண்கள் சிவந்தன. "என்ன தம்பி, ஒரு மாதிரியாக இருக்கிறுய்?" என்று கேட்டுக்கொண்டே ஒருவர் அழகப்பன் அருகில் சென்றுர். அவன் கையைப் பிடித்தார். மறுவிநாடி "என்ன தம்பி, உன் உடம்பு இப்படி அனலாய்க் கொதிக்கிறதே!" என்றுர். ஆம், அழகப்பனுக்குக் காய்ச்சல்! நல்ல காய்ச்சல்! உடனே எல்லாரும் அழகப்பனைச் சுற்றிக் கூடிவிட்டனர். கப்பல் தலைவருக்கும் இச் செய்தி எட்டிவிட்டது. அவர் ஒரு வெள்ளைக்காரர். உடனே அவர், "ஒரு வேளை இந்தச் சிறுவனுக்கு அம்மை நோய் வந்தாலும் வரலாம்; காய்ச்சலுடன் கப்பலில் அழைத்துச் செல்வது ஆபத்து! எல்லாருக்கும் பரவிவிடும். ஆகையால், நாகப்பட்டினத்திலே இவனை இறக்கிவிடவேண்டியதுதான்" என்று கூறினர்.

கப்பல் தலைவர் கூறியதைக் கேட்டதும், "பாவம் இந்தப் பையன் இப்படிப் பயணத்தை நடுவழியிலே நிறுத்தவேண்டியிருக்கிறதே!" என்று எல்லாரும் கவலைப்பட்டார்கள். ஆனல், அழகப்பன் கொஞ்சங்கூடக் கவலைப்படவில்லை. "நல்ல காலம், காய்ச்சல் வந்தது. நாகப்பட்டினத்திலே நம்மை இறக்கிவிட்டு விடுவார்கள். அங்கிருந்து ஊருக்குப் போய்த் தொடர்ந்து படிக்கலாம்! என்று உள்ளூர மகிழ்ச்சி அடைந்தான்.

நாகப்பட்டினம் வந்தது. கப்பலைவிட்டு அழகப்பனைக் கீழே இறக்கினர்கள். இறங்கியவுடனேயே காய்ச்சல் குறையத் தொடங்கியது. சில நாட்களில் காய்ச்சல் பறந்தே போய்விட்டது!

"எனக்கு இப்போது காய்ச்சல் இல்லை. நலமாகவே இருக்கிறேன். தொடர்ந்து இங்கேயே படிக்க ஆசை" என்று தந்தையாருக்கு அறிவித்தான். அவரும் 'சரி' என்றுர்.

அழகப்பன் தொடர்ந்து படித்தான். ஆசைப் பட்டது போல் பட்டதாரி ஆனுன். பி. ஏ. (ஆனர்ஸ்) பட்டம்பெற்ற பிறகு, இங்கிலாந்து சென்ருன். பாரிஸ்டர் பட்டத்தை அங்கு பெற்ருன். பாரிஸ்டர் பட்டம் பெற்ற பிறகும் அழகப்பன் என்று அழைப்பது முறையா? பார்-அட்-லா அழகப்பச் செட்டியார் என்றே எல்லாரும் அழைத்தார்கள். பிறகு, அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் கிடைத்தது. டாக்டர் அழகப்பச் செட்டியார் என்று மரியாதையோடு கூறினுர்கள். ஆனுல் மக்களெல்லாரும் சேர்ந்து அவருக்குக் கொடுத்த பட்டம் ஒன்று உண்டு. அதுதான் வள்ளல் என்ற பட்டம். வள்ளல் அழகப்பச் செட்டியார் கல்விக்காக வாரி வாரி வழங்கினுர். கரைக்குடியில் உள்ள அழகப்பா கல்லூரி, அங்கேயுள்ள மின்சார இரசாயன ஆராய்ச்சி நிலேயம் சென்னேயிலுள்ள அழகப்பா பொறியியற் கல்லூரி, அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் அவர் கொடுத்த ஐந்துஇலட்ச ரூபாயில் ஆரம்பிக்கப்பெற்ற பொறியியற் கல்லூரி இவையெல்லாம் அவரது வள்ளல் குணத்தை நாள்தோறும் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

வெங்காய மகிமை

நேபாள மக்கள் கடவுளுக்குக் காணிக்கையாக வெங்காயத்தைப் படைக்கிருர்கள்.

கடவுள் நம்பிக்கையற்ற பெரியார், அடிக்கடி கூறும் சொல் வெங்காயம்.

கல் நெஞ்சர்களேயும் கண் கலங்க வைக்கும் ஆற்றல் வெங்காயத்திற்கு உண்டு.

நம் நாட்டின் மிகத் தொன்மையான சரகம்சம்கித என்னும் வடமொழி வைத்திய நூலில் வெங்காயத்தின் உயர்ந்த குணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

நாம் வெற்றிலேயை வைத்துச் சத்தியம் செய்கிருேம். எகிப்தியர்கள் வெங்காயத்தை வைத்துச் சத்தியம் செய்கிருர்கள்.

எல்லாவகையான உணவுப் பொருள்களோடும் கலந்து சுவை தரும் ஆற்றல் வெங்காயத்திற்கே உண்டு.

பச்சை வெங்காயத்திற்குக் காசநோயைப் போக்கும் சக்தி இருக்கிறது.

பிரெஞ்சு நாட்டு மக்கள் காக்காய் வலிப்பு நோய்க்கு வெங்காயச் சாற்றை உண்டு வந்திருக்கிருர்கள்.

வெங்காயத்தில் புரதச் சத்துக்களும் தாது உப்புக்களும் வைட்டமின்களும் கணிசமான அளவில் உள்ளன.

ரோம் நகரம் எரிந்தபோது பிடில் வாசித்துப் புகழ்பெற்ற நீரோ மன்னன், தன் குரல் இனிமைக்காக வெங்காயச் சாற்றினேச் சாப்பிட்டு வந்தான்.

வெங்காயவைத்தியம் என்ற நூலிலிருந்து,

தொகுத்தவர்: இராமதிருப்பதி

வெளியீடு: அன்னேநிலேயம்

ஆசிரியர்: கேஸ், எஸ்: லட்சுமணன்



கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மிகத் தீவிரமாக இந்தியை ஆதரித்து வந்த அரசியல் தலைவர்கள் சிலர், இன்று மிகத் தீவிரமாக அம் மொழியை எதிர்த்து வருகிறார்கள்.

ஆனால் செட்டிநாட்டரசர் அவர்கள் அன்றுமுதல் இன்றுவரை என்றும் இந்தியை எதிர்த்தே வந்திருக்கிறார்கள். அதே சமயம் ஆங்கிலம் நமக்கு மிகவும் இன்றியமையாதது என்பதைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

இக் கருத்தினை அவர்கள் மீண்டும், மார்ச் திங்கள் 31-ஆம் நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு நடந்த தேனீர் விருந்தில் மிகவும் அழகாகவும் அழுத்தமாகவும் கூறியுள்ளார்கள்.

“இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாக வந்தால் அது ஒரு பெரிய வெள்ளம்போல வந்து தமிழ்மொழியை அழித்துவிடும். அதனால் இந்தி ஆட்சிமொழி என்ற வெள்ளத்தை ஆங்கிலமொழி என்ற அணையால்தான் தடுத்து நிறுத்தமுடியும். ஆங்கில மொழியைப் புறக்கணித்தால் நாம் உலக நாடுகளுடன் இணைந்து முன்னேற முடியாது. பல்கலைக் கழகங்களில் ஆங்கிலமே போதனை மொழியாக இருக்கவேண்டும். தமிழக அரசின் இருமொழித் திட்டம் பாராட்டிற்கு உரியது.”

அரசரின் மொழிக்கொள்கை, வருங்காலத்தினை அறிகின்ற அவர்களுடைய பேராற்றலினை நமக்கு நன்குவிளக்குகின்றது.

கருத்தரங்கம்

நூலகங்கள் அறிவுச் செல்வத்தை நல்கும் பல்கலைக் கழகங்களாகும். அதன் வளர்ச்சி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இக் கருத்தினை வலியுறுத்தும் வகையில் தோற்றுவிக்கப்பட்டதே தமிழ்நாடு வாசகர் பேரவை. இப் பேரவையின் முதல்மாநாடு தேவகோட்டையில் ஏப்ரல் திங்கள் 5, 6ஆம் நாட்கள் நடைபெற்றது. அதில் பலதுறைப் பெருமக்களும் கலந்து கொண்டார்கள்.

முதல்நாள் விழாவிற்குச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமைதாங்க, தவத்திரு குன்றகுடி அடிகளார் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். மாலையில் நடந்த கருத்தரங்கிற்கு ராய. சொ. அவர்கள் தலைமை வகித்தார்கள். இரண்டாம் நாள் விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி காந்தன் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமை வகிக்க, கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். மாலையில் நடந்த கருத்தரங்கிற்குக் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் தலைமை வகித்தார்கள். என்றும் அருள்நெறி பரப்பிவரும் தேவகோட்டை அன்று, நூலகத்துறைக்கு அறிவுஒளி பரப்பும் தேவகோட்டையாக விளங்கியது.



வரவேற்புக்குழுத் தலைவர் அருணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள்.



கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் கருத்துரை யாற்றுகிறார்கள்.

மாநாடு வெற்றிபெறுவதற்கு இராமநாதபுரம் மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் மிட்லண்ட் இராமநாதன் செட்டியார் அவர்களும், வரவேற்புக்குழுத்தலைவர் அருணன்அவர்களும், சி.அ. கருணாநிதி அவர்களும் பெருந்துணை புரிந்தார்கள்.

காசி விசாலாட்சி கவிமதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணாமலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட் டை வளர்த்த நகரத்தார் அல்லேமோ!

—கவியரசர்: கண்ணதாசன்


சிறுவர் இலக்கிய உலகம்

செடி செம்மையாக வளர்ந்தால்தான், மரம் நலமாக விளங்கும். சிறுவர்களுக்கும் இது பொருந்தும்.

சிறுவர் அறிவு வளம்பெற, சிறுவர் இலக்கியங்கள் இன்றியமையாத துணையாக விளங்குகின்றன. அவ்வகையில் பல சிறந்த சிறுவர் இலக்கியங்களை உருவாக்கி, தென்மொழிப் புத்தக டிரஸ்ட் அரும்பணி புரிந்து வருகிறது.

அப் பணியின் சிகரமாக 28—1—69 ஆம் நாள் தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் ஐந்து நூல்களை டிரஸ்ட், யுனெஸ்கோ ஆதரவில் வெளியிட்டது.

அந்த விழா, அந் நூல்களை வெளியிட்ட பதிப்பாளர்களின் கூட்டுறவோடு சென்னை அசோக் ஓட்டலில் நடைபெற்றது அந்நாள் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்க - உலக நாடுகள் சங்கத்தில் டைரக்டராகப் பணிபுரியும் மேன்மைமிகு ஆதிசேஷய்யா அவர்கள் அந் நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்தார்கள். நூல்களின் அமைப்பு முறையினை அறிஞர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.



மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ஆதிசேஷையா அவர்களும் வீற்றிருக்கப் பன்மொழிப் புலவர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள்.



விழாவிற்கு வந்து சிறப்பித்த செட்டி நாட்டரசரோடு, பரிந்துரையாளரும் புலவரும் மகிழ்ந்து உரையாடுகின்றனர்.

தமிழ்நூல்கள் இரண்டும் சேதுநிலைய வெளியீடு ஆகும்.

நூல்கள்:

கனவுலகக் குழந்தைகள். பறக்கும் பூக்கள்.

முறையே ஆசிரியர்கள்:

கல்வி கோபாலகிருஷ்ணன்.

குமாரபுரம் தேவதாஸ், தமிழாக்கம் முஸ்தாபா.

ஆச்சிகள் உலகம்

[வள்ளல் அழகப்பரின் அருமைப் புதல்வியும், அழகப்பா கல்வி நிறுவனங்களின் கரஸ்பாண்டெண்டுமான திருமதி உமையாள் ராமநாதன் அவர்களை, திருமதி சரசுவதி பழனியப்பன் பி. ஏ. அவர்கள் சந்தித்தார்கள். அப்பொழுது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்.]

நம் மரபினருக்காக அழகப்பர் செய்த அறங்கள் யாவை? என்று கேட்ட போது......

நகரத்தார் நல்வாழ்வுக்கு மட்டும் என்று தனிப்பட்ட முறையில் என் தந்தையாராகிய வள்ளல் அழகப்பர் ஆற்றியுள்ள அறப் பணி குறித்து எனக்குத் தெரியவில்லை. தான் பிறந்த நாடு பல வகையாலும் வளமுற வேண்டும் என்று விரும்பியவர் அவர். அத்தகைய பரந்த மனப்பான்மையில் அழுத்தமான பற்றுடையவருங் கூட. ஆனாலும் நகரத்தார் சமூகமும், ஏனைய சமூகத்தினரைப் போலக் கல்வி வளம் பெற வேண்டும் என்ற எண்ணம் மிக்கவர் அவர். எனவே தான் அம்மரபினர் அதிகமாக உள்ள, தமது சொந்த ஊராகிய கோட்டையூர், பிறந்த ஊராகிய காரைக்குடி, செல்வம் கொழித்த தேவகோட்டை, ஆகிய இடங்களுக்கு அருகில், தமது கல்வி அறத்தை நிறுவினார். அது வளர்ந்தோங்க, தமது உடல் பொருள், ஆவி உடைமை அனைத்தையும் அர்ப்பணித்தார் என்றால் அது சிறிதும் மிகையல்ல. மத்திய மின்சார இரசாயன ஆய்வுக்கூடத்தை நம் தமிழகத்தில், அதுவும் தமது கல்வி நிலையங்கள் எழும்பியுள்ள அழகப்பபுரத்தில், நிறுவச் செய்துள்ளார். அதனால் அகில உலக விஞ்ஞான வட்டத்தில் காரைக்குடிக்கு ஒரு நல்ல இடம் தேடித் தந்துள்ளார். கோடிக்கணக்கில் கொடையளித்துக் கல்வி அறம் ஓங்கச் செய்த என் தந்தையாரின் அறப்பணியினால் நகரத்தார் சமூகத்தில் பட்டதாரிகள் ஏராளமாகப் பெருகியுள்ளனர். வாழையடி வாழையாக இன்னும் பன்னெடுங் காலம் இந்நிலை தொடர்ந்து பெருகவும் வகை செய்துள்ளார். எனவே நம் மரபினர் முன்னேற அறப்பணி செய்த பெருந்தகையோர்கள் வரிசையில், என் தந்தையாரும் ஒரு சிறப்பான இடம் பெறுவாரல்லவா?

நம் சமூகப்பெண்கள் முன்னேற்றத்திற்குத் தாங்கள் கூறும் வழிகள் யாவை? என்ற கேள்விக்கு அவர்கள் கூறிய கருத்துக்கள்.

ஒரு காலத்தில் நகரத்தார் சமூகத்தினர் பெரும்பாலும் பெரும் செல்வந்தர்களாகத் திகழ்ந்தார்கள். காலப்போக்கில் அந்தநிலை மாறி வந்துள்ளது. அதனால் நம் மரபுப்படி பெண்கள் வீட்டிலிருந்து கொண்டு, பிறர் பையை எதிர்பாராது வாழ்க்கைநடத்தும்



உமையாள் இராமநாதன்

வாய்ப்புக் குறைந்து விட்டது. இந்தச் சூழ்நிலையை நம் மரபினர் நன்கு உணரவும், மனதில் நன்கு கொள்ளவும் வேண்டும். அவர்கள் முன்னேற்றம் பெறக் கீழ்க் கண்ட வழிகள் நல்லவை என எனக்குத் தோன்றுகின்றன.

1. பெண்களைத் தவருது கல்வி கற்கச் செய்ய வேண்டும்.

2. அவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு ஆதரவும், ஊக்கமும் தயங்காமல் தரவேண் டும்.

3. பழைய மரபுகளை மதிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் காரணமாக அவற்றையே உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண் டிருக்கக் கூடாது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவற்றைத் தளர்த்தியும் மாற்றியும் அமைத்துக் கொள்ள வேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இதனல் வளர, வழி பிறக்கும்.

4. செல்வம் கொழிக்கும் நகரத்தார், நம் மரபுப் பெண்களிடம் அனுதாபம் கொள்ள வேண்டும். அவர்கள் சிறிய சிறிய கைத் தொழில்களில். ஈடுபட வகை செய்து தரலாம்.

5. “பெண்ணுய்ப் பிறந்து விட் டோமே’ கலியாணம் செய்து கொள்ளப் பணம் இல்லையே? கலியாணமும் ஆகுமோ? என்று வயது வந்த பெண்கள் மனம் உடைய விடக் கூடாது. தாங்கள் பெற்ற கல்வியின் பயன் வீணுகாது அதனல் நமக்கு வாழ்க்கையில் நல்ல எதிர்கால மணவாழ்வும், அதை அடுத்த பல்வேறு சிறப்பான வாழ்க்கையும் அமையும் என்ற நம்பிக்கையின் நல் ஒளியை அவர்கள் காண வழி செய்ய வேண்டும்.

நம் மரபுப் பெண்கள் மேலே சொன்ன வழிகளுக்கு முழு ஆதரவும், பரிவும் காட்ட வேண்டும்.

குழந்தைகளைப் பற்றியும், அவர்கள் எதிர்காலம் பற்றியும் சொல்லுங்கள் என்றபோது......

எனக்கு ஒரு மகளுங் மகனும் இருக்கின்றனர். பெண்தான் மூத்தவள். உண்ணுமலை என்ற பெயர் கொண்ட அவள் பி. ஏ. பட்டதாரி. நன்கு ஆங்கிலம் பேசுவாள். அவளுக்குக் கலியாணமாகி நான்கு ஆண்டுகள் ஆகப்போகின்றன. என் மறு தாயாராகிய லட்சுமி ஆச்சி அவர்களுக்கு மகஞக வரிக்கப் பெற்றவரும், என் தம்பி முறை உடையவருமாகிய திரு. அழ. இராமனுதன் B. Sc., என் மாப்பிள்ளை. இத் தம்பதிகளுக்கு நல்ல எதிர்காலம்உள்ளது. இறைவன் அதற்கு உறுதுணையாக இருப்பாராக.

எனக்கு ஒரு மகனும் உண்டு என்று சொன்னேனல்லவா? அவன் பெயர் ராம. வயிரவன். இரசாயனப் பொறியியல் பட்டப் படிப்புப் படித்துக்கொண்டிருக்கிறன். அடுத்த ஆண்டில் பட்டம் பெற இருக்கிறன. டென்னிஸ் விளையாடுவதில் ஆர்வமும் திறமையும் உண்டு. வெற்றிக் கோப்பைகள் நிறையக்கிடைத்துள்ளன. கார் நன்ருக ஓட்டுவான். என் கணவருக்கும் எனக்கும் அவன் இவ்வளவு வேகமாகப் போகக் கூடாது என்ற எண்ணம் உண்டு.

என் கணவர் மிகப் பெரிய மேல் நாட்டு மருந்து தயாரிக்கும் நிறுவனத்துடன் நெருங்கிய நிருவாகத் தொடர்பும், அது சம்பந்தமான வியாபாரமும் நடத்தி வருகிருர். அதனுல் என் மகன் வயிரவனைப் படிப்பு முடிந்ததும் மேலை நாடுகளுக்கு அனுப்பி, நல்ல பயிற்சி பெறச் செய்து, எங்கள் வியாபாரத்தையே பெருக்கலாம் என்ற திட்டம் மனதில் உள்ளது. அது முற்றிலும் நிறைவேறத் தண்டாயுதபாணி திருஅருள் கூட்டும் என நம்புகிருேம்.

கணவரைப் பற்றிக் கூறியவை.

எனக்குக் கலியாணமாகி இரு பத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது வெள்ளிவிழா ஆண்டு என்றும் சொல்லலாம். என் அத்தை மகனே என் கணவர். அவரது பெயர் வயி. இராமனுதன் ஆகும். அவரது ஊர் கண்டனூர்.

தனக்கு என்று ஒரு கொள்கையும், அதில் நம்பிக்கையும், பற்றும் கொண்டவர் என் கணவர். தம் மனதிற்குச் சரி என்று பட்டதைத் தயங்காமல் சொல்லி விடுவார். பிறர் விவகாரங்களில் வலிந்து வநது தலையிடமாட்டார். எந்தச் சூழ் நிலையிலும் மனச் சோர்வு அடைய மாட்டார். சுத்தமாக எதையும் செய்வார்; வைத்துக் கொள்வார். தூய்மையாகவும், எடுப்பாகவும் உடையணிவதில் கவனம் செலுத்துவார். நண்பர்களோடு நன்ருகவும், பண்போடும் பழகுவார். நகைச் சுவையாகப் பேசி மகிழ்வார்; நகைச்சுவையை ரசித்தும் மகிழ்வார். பாரதப் பெண் தன் கணவரின் பெருமையை அடுக்கிக் கொண்டுபோவதில் விருப்பம் காட்டுவது இயல்பு தானே! அதற்கு நான் விலக்கல்லவே!

செய்தி மலர்

* உயர்திரு. அ. மு. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள், சென்னைத் தொழில் வர்த்தகசங்கத்தின் 1969—70-ஆம் ஆண்டுத் தலைவராகத் (Chairman Madras Chamber of Commerce and Industry) தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். பல வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை உறுப்பாகக் கொண்ட இச்சங்கத்தில் உயர்திரு அ. மு. மு. முருகப்பசெட்டியார் அவர்களுக்குப்பின் நம்மரபினரில் இவர்கள்தான் தலைவராகியுள்ளார்கள் என்பது மிகுந்த சிறப்பிற்குரியது. இவர்கள் புகழ்பெற்ற டி.ஐ. சைக்கிள் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவராக இருப்பதுடன் இந்தியாவில் உள்ள பல பெருந்தொழில் நிறுவனங்களில்தொடர்புடையவர்களாகவும் விளங்குகிறார்கள்.



* வலையபட்டி உயர்திரு. வடு. வயி. நடராசன்செட்டியார் அவர்களின் மணிவிழா 23—3 69-ம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவிற்குப் பல்துறைப் பெருமக்களும் வந்து சிறப்பித்தார்கள். மணிவிழா பெருந்திருவிழா போல நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்தவர்களை நடராசன் செட்டியார் அவர்களின் குமாரர் உயர்திரு. வயிரவன்அவர்களும் மற்றும்பலரும் வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

* சென்னை உஸ்மான் சாலையில் நடைபெற்றுவந்த சௌந்தரா பிரிண்டர்ஸ் என்ற அச்சகம் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை 403ம் எண் கட்டிடத்திற்கு மாற்றப்பட்பட்டிருக்கிறது இதன் பங்குதாரர் மெ. முருகப்பா அவர்கள் வெளிநாட்டு இயந்திரங்களை வாங்கி அச்சகத்தை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். முருகப்பா அவர்கள், கிளை வங்கிகளின் கண்காணிப்பாளராக (Superintent ef Branches) இந்தியன் வங்கியில் பணியாற்றும் பி. எஸ். எஸ். பி. மெய்யப்பசெட்டியார் அவர்களின் குமாரர்.

* உயர்திரு. எம். வி. அருணாசலம் அவர்கள் நெய்வேலி பழுப்புநிலக்

கரிக்கழகத்தின் தலைவராக (Chairman Neyveli Lignite Corporation) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வெளியார் துறையிலிருந்து அக் கழகத்திற்கு இவர்களே முதன் முதலில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



அனைத்துலக ரோட்டரிசங்கத்தில் 320ஆம் மாவட்டத்திற்கு R-I-(District 320) 1970-71ம் ஆண்டிற்கு இவர்கள் கவர்னராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் என்பது மேலும் சிறப்புக்குரிய செய்தி. பல தொழில் நிறுவனங்களின் நிர்வாகத் தலைவராக இவர்கள் விளங்கி வருகிறார்கள். இவர் புகழ்பெற்ற தொழில் மேதை-அ. மு. மு. முருகப்பசெட்டியார் அவர்களின் தம்பி வெள்ளையன் செட்டியார் அவர்களின் மூத்த புதல்வர்.

* சிறப்பும், பயனும், சுவையும் நிறைந்த எண்ணற்றசெய்திகளைப் பத்திரிகைகளில் தருவது என்பது மிகவும் அரிய காரியம். இதனை உயர்திரு. தமிழ்வாணன் அவர்கள் வாரந்தோறும் தம் கல்கண்டு இதழ்மூலம் வியக்கத்தக்க வகையில் நிறைவேற்றி வருகிறார்கள். இத்தகைய பெருமைக்குரிய அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக இருந்து வருகிறார்கள்.



அவர்கள் இப்பொறுப்பில் நியமிக்கப்பட்டதின்மூலம் எழுத்தாளர் உலகமே கௌரவம் பெற்றிருக்கிறது. தமிழ்வாணன் அவர்களது இயற்பெயர் இராமநாதன். ஊர்-தேவகோட்டை.

* சிங்கப்பூர் பாலி டெக்னிக்கில் உற்பத்திப் பொறியியல் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக (Production Engineering in Singapore Poly technic) நியமிக்கப்பட்டுள்ள உயர் திரு. S. S. மணியன் (சோமசிவசுப்பிரமணியன்) அவர்கள்.



அதன் பொருட்டு 20-4-1969 ஆம் நாள் விமானம் மூலம் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்கள். இவர்கள் இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் இன்ஸ்டிட்யூட் ஆப் சைன்ஸ் அண்ட். டெக்னலஜியில் உற்பத்திப் பொறியியல் உயர் பட்டம் பெற்று இங்கிலாந்திலேயே எட்டாண்டுகள் உயர்ந்த பல பதவிகள் வகித்தவர்கள்-அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் உயர் திரு எஸ். எம். லட்சுமணன் அவர்கள் தம்பி ஆவார்கள்.

முகவரி.

S. S. Manian
Lecturer-Production
Engineering
Singapore polytechnic
Singapore

* உலகெங்கும் எண்ணற்ற கவிஞர்கள் தோன்றியிருக்கிருர்கள். ஆனல் குழந்தை இலக்கியங்களை மிக எளிய இனிய கவிதைகள் மூலம் கூறிக் குழந்தைக் கவிஞர் என்ற சிறப்பினையும் பெற்றவர் அழ. வள்ளியப்பா அவர்களே ஆவார்கள். கவிஞர் அவர்கள் இந்த ஆண்டும் குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்குத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். அதோடு சென்னை வானெலி நிலைய ஆலோசனைக் குழுவில் அவர்கள் இடம் பெற்றிருக்கிருர்கள் என்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியனவாகும்.

* அரிமளத்தைச் சேர்ந்த வயி. சுப்பிரமணியன் அவர்கள் அமெரிக்காவில் உள்ள மின்னெபொலிஸ் நகரில் உள்ள மின்னெசொட்டா பல்கலைக் கழகத்தில் இயந்திரத் தொழில் பொறியியல் எம். எஸ். பட்டக் கல்வி (M. S. in Industrial Engineering) கற்று வருகிருர்கள்-1965-ஆம் ஆண்டு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இயந்திரப் பொறியியலில்-பி. இ. ஆனர்ஸ்ப் பட்டம் பெற்ற



இவர்கள் சென்னையில் உள்ள காரிபொரண்டம் யூனிவர்சல் நிறுவனத்தில் உதவி உற்பத்திப் பொறி இயலராகச் சில காலம் பணியாற்றி உள்ளார்கள்-இவர்கள் மதுரை சௌத் இந்தியா கார்பொரேஷன் நிறுவனத்தின் ஜெனரல் மானேஜராகப் பணியாற்றும் உயர் திரு. ஏ. கணபதிச் செட்டியார் அவர்களின் மாப்பிள்ளை.

முகவரி.

VE. Subramaniam
BE (Hons) Mech
Appartment No-311
1015, Essex Street-S. E.
Minneapolis-14,
Minnesota—55414
U. S. A.

* கூட்டுறவின் பெருமையினை நாம் விரிவாகவும் தெளிவாகவும் உணர்ந்து வருகிருேம். இதற்கு எடுத்துக் காட்டாகத் தென்னுர்க்காடு மாவட்ட நகரத்தார்கள் 23-3-1969 ஆம் நாள் சிதம்பரத்தில் கூடி, தென்னுர்க்காடு நகரத்தார் சங்கத்தை அமைத்துள்ளார்கள். இச்சங்கத்தின் தலைவர் திரு. சுப. சேதுராமன் செட்டியார்

அவர்கள். துணைத் தலைவர்கள் திரு. இராம கருப்பையா செட்டியார் அவர்கள். திரு. எஸ். சேதுராமன் அவர்கள். செயலாளர்கள் திரு. சுப. திண்ணப்பன் எம். ஏ. எம். லிட் அவர்கள். திரு. எம் தேனப்பன் பி. இ. (கெம்) அவர்கள். பொருளாளர் திரு. வெ. பழனியப்பன் எம். ஏ. அவர்கள்.

இச்சங்கம் 2-4-1969—ஆம் நாள் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

இச்சங்கத்தின் தொடக்க விழா, அக்டோபர்த் திங்களில் செட்டி நாட்டரசர் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது.

x x x

இனிக்கும் பேனு

என்ன? பேனு இனிக்குமா? ஆம் இனிக்கும்! கொழுப்புச் சத்து இல்லாத இனிப்புத் திரவத்தை உங்களுக்கு வேண்டிய அளவு, காபி, மற்றும் பானங்களுக்கு நல்குகிறது. இந்த இனிக்கும் பேனு! 500 தேக்கரண்டி அளவுள்ள சர்க்கரைக்குச் சமமான இனிப்புத் திரவம் கொள்ளக் கூடிய இந்தப் பேனு, புதுமைகளுக்கெல்லாம் புதுமையாக விளங்குகிறது அல்லவா!

மலேசியா, சிங்கப்பூருக்கு

கப்பல் போக்குவரத்து

மே, ஜூன் விவரம்

ரஜூலா சென்னை

வருகை	7—5—69
புறப் படுதல்	10—5—69
வருகை	31—5—69
புறப்படுதல்	3—6—69
வருகை	24—6—69
புறப்படுதல்	27—6—69

ஸ்டேட் ஆப் மதராஸ்

வருகை	28—4—69
புறப்படுதல்	2—5—69
வருகை	21—5—69
புறப் படுதல்	25—5—69
வருகை	13—6—69
புறப் படுதல்	17—6—69

நகரத்தார் கலைக் கழகம்
சென்னை.

ஏப்ரல் திங்கள் நிகழ்ச்சிகள்

20 – 4—69

பசும் பொன்—நாடகம்

இடம் : தேனும்பேட்டை காங்கிரஸ் கலை அரங்கம்

27—4—69

மேஜர் சுந்தரராஜன் நடிக்கும்

ஞான ஒளி நாடகம்

இடம் : கிருஷ்ணகானசபா கலை அரங்கம்

கிரிபித் சாலை சென்னை-17.

பாடும் குலவிளக்கு

மழலைக்கவிஞர் நாகமுத்தையா

ஆசைக்(கு) இலக்காகி ஆரெழிலைத் துய்த்தற்குக்
காசைக் கரியாக்கிக் காரிகையின் பின்சுற்றிக்

கோவலன் வாழ்ந்ததனைக் கூறும் கதைதன்னைப்
பாவலர்கள் பாடப் படித்தறிவோம் நாமெல்லாம்.

வாவென்றால் வந்து வணங்கித் தலைகுனிந்து
தாவென்றால் தந்து தயங்கா மகிழ்வூட்டிப்

போவென்றால் போய், நல்ல போகம் தணிப்பதுவே
பாவையர்தம் பண்பென்ற பாங்கறியாக் கண்ணகியோ

தெய்வம் பெரிதென்றாள்-தேடிவந்த கோவலனை
மெய்சோர வாடவிட்டாள்—மேனிக்குத் தாழிட்டாள்.

பொங்கிவரும் ஆசைவெள்ளம் போய்த்தங்கப்
பள்ளமென
மங்கையவள் மாதவியாள் மாமனையைத் தான்தந்தாள்

வாடும் பயிருக்கு வான்மழையே நல்லமுதம்
தேடும் எறும்புக்குத் தேன்நல் உணவாகும்

ஓடும் விலங்குக்கோ ஓய்வே உயிராகும்
பாடுற்ற கோவலற்குப் பைந்தொடியே வாழ்வானாள்.

நல்லவளே மாதவியும்; நற்றவத்தாள் கண்ணகியும்
நல்லவளே என்றாலும் நாயகனின் போக்குக்(கு)

இசைந்து நடக்கின்ற எண்ணம் மறந்தாள்.
அசைந்து பணிந்தாள் ஆரெழில் மாதவியாள்.

மாதவியை ஆடும் மணிவிளக் கெனச்சொன்னால்
பாதமலர்க் கண்ணகியாள் பாடும் குலவிளக்காம்

நல்ல நகரத்தார் நாடாண்ட கோலத்தைச்
சொல்லி விளக்கிச் சுகங்காட்டும் நற்கதைதான்

வெல்லும் இளங்கோ விதைத்த சிலம்பாகும்
வல்லார் புகழ்ஏற்ற வாழ்ந்தகுடி நம்குடியாம்

முன்னைப் பெருமை முழுவதையும் நாம்பெற்றே
என்றென்றும் வாழ்வோம் இனி!



புதுமை உலகம்

அழைத்துச் செல்பவர் : எஸ். பி. எல். பழநியப்பா பி.ஏ., பி. எல்.,

மனித உடலுக்கு மாற்று உறுப்புக்கள்

விமானம், கப்பல், கார் முதலிய வற்றிற்கு மாற்று உறுப்புக்கள் (Spare Parts) கிடைப்பது போல மானிட உடலுக்கும் வேண் டிய செயற்கை உறுப்புக்கள் கிடைப்பதும், அவற்றைப் பொருத்தி இயங்க வைப்பதும் நடைமுறையில் சாத்தியமாகி வருகின்றன. அண்மைக் காலத் தில் ஒருவரின் இருதயத்தை மற் ருெருவருக்குப் பொருத்தும் புதுமை நிகழ்ந்தது. ஆனுல் புதுமையினும் புதுமை, டெக் ரான் நூல், பிளாஸ்டிக் இவற் றைக் கொண்டு செய்யப்பட்ட இருதயம் ஒருவருக்குப் பொருத் தப்பட்டது.

இயற்கையான மாற்று இரு தயம் கிடைக்கும்வரை, அதாவது மூன்று நாட்கள் இந்தச் செயற்கை இருதயத்துடனேயே அந்த மனிதர் உயிர் வாழ்ந்தார் என்ருல், நமக்கு எல்லையற்ற வியப்பு ஏற்படுகிறதல்லவா?

மனித இருதயத்தைப் போன்ற அளவோடும் அமைப்போடும் செய்து மாபெரும் சாதனை புரிந்த வர்கள் அமெரிக்க வைத்திய நிபுணர்கள்.

மாற்று உறுப்புக்களுடன் மனி தன் பவனி வரலாம் என்பதை இனி நம்புவார்களல்லவா?

மிதக்கும் வானெலிப் பெட்டி

பூமிக்கு அடியிலும், நீருக்குள் ளும், ஆகாயத்திலும், அங்கு இங்கு எனுதபடி எங்கும் மிதக்கும் வானெலிப் பெட்டியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர் களா?

பஞ்சடைத்த பிளாஸ்டிக் கூட் டிற்குள் நீர் புகாத முறையில் இந்த வானெலிப் பெட்டி உரு வாக்கப்பட்டுள்ளது. கையடக்க மானது. கருத்தைக் கவர்வது. புதுமையைப் போற்றி வரவேற் கும் இன்றைய இளைஞர் சமுதா யத்திற்கு இது ஒரு வரப்பிரசாத மாகும்!

நம்புங்கள்! நம்புங்கள்!!

புதிய கண்டுபிடிப்பான ஒரு தொலை நோக்கிப் புகைப் படக் கருவி எட்டுக் கல் தொலைவில் இருக்கும் ஒருவரைக் கூட மிக எளிதாகப் படம் எடுத்து விடு கிறது. "இதில் என்ன புதுமை இருக்கிறது. சுக்கிர மண்ட லத்தையே நாம் புகைப் படம் மூலம் பார்க்கிருேமே என்கிறீர் களா? அக் கருவியின் அதிர்ச்சி தரும் உண்மை என்னவென்ருல் சாதாரணப் புகைப் படக் கருவி களால் எடுக்க முடியாத படங் களை, நள்ளிரவிலும் கும்மிருட்டி லும் புதிய கருவி மிக எளிதாகப் படம் பிடிக்கிறது.

வளம்பெற வாய்ப்புக்கள்

பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கழகம் (Indian Institute of Science, Bangalore-12). விஞ்ஞானத்திலும், பொறியியலிலும் ஆராய்ச்சியிலும், மேல் பட்டப் படிப்பிலும் பல பட்டங்களை வழங்குகிறது. 1969–70ம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்களின் விபரமும் அதற்கு மனுக்கள் அனுப்பவேண்டிய தகுதிகளும் கீழே தரப்பட்டுள்ளன. பலரும் இதில் சேர்ந்து பயனடைவார்கள் என்று நம்புகிறோம்.

Faculties / Courses Available:

RESEARCH—Faculty of Science. (Leading to Ph.D. only).

RESEARCH—Faculty of Engineering. (Leading to M.Sc. and Ph.D.)

M. TECH. COURSE IN PHYSICAL ENGG. (2 years in duration).

M.E. COURSES. (2 years in duration).

POST - GRADUATE DIPLOMA COURSE IN INDUSTRIALMANAGEMENT (1 year in duration).

B.E. COURSES. (3 years in duration).

Note:—A new Post-Graduate Diploma Course of one year duration in MOLECULAR BIO-CHEMISTRY will be introduced from the session 1969-70. A separate announcement regarding this will follow.

A number of fellowships and scholarships both for Research and Courses are available.

Minimum Qualification: First or Second Class Master's Degree with at least 50% marks in the aggregate for Research in the Faculty of Science. For rest of the Courses a First or Second Class Bachelor's Degree with atleast 50% marks in the aggregate.

Candidates who possess the qualifications outlined above may send immediately an enquiry to the Registrar, Indian Institute of Science, Bangalore–12, accompanied by a self-addressed stamped (0.30 Paise) envelop of size 23 cms. × 10 cms. On receipt of the same the Institute will arrange to send a booklet "Admission Announcement" containing details of the admission.

PRESCRIBED DATES

Last date for receipt of requisitions for application forms.

for Research	**for Courses**
Friday, 9th May, 69.	Monday, 26th May, 69.

Last date for receipt of completed application forms.

for Research	for Courses
Friday, 30th May, '69.	Monday, 16th June, 69.

S. S. PRASAD,
Registrar.

*** Jawaharlal Institute of Post-graduate Medical Education and Research, Pondicherry-4. Offers**

M. S. Degree in Surgery and M. D. Degree in Medicine.

Application form can be had from the Principal on payment of Rs. 1-50 by Cash or M. O. only. Last date for receipt of filled in Applications is 3rd May, 1969.

*** All-India Institute of Mental Health.**

(Estd. by the Govt. of India)

Applications are invited upto 30th April, 1969, from eligible candidates for admission to courses leading to (i) M.D. Degree in Psychological Medicine. (ii) Ph.D. Degree in Clinical Psychology and (iii) M.S. Degree in Neuro-surgery of Bangalore University conducted at this Institute from 1st July, 1969.

Particulars relating to minimum qualification for admission, duration of Course, tuition fee and prescribed application form can be obtained from the Director of the Institute, Post Bag No. 15, Bangalore-27, by sending a self-addressed 25 Paise stamped 23 cm. x 10 cm. envelope.

*** Indian Council of Agricultural Research.**

Applications are invited for four Senior Research Scholarships (Rs, 250/- p.m.) for research in Marine Fisheries from qualified candidates (M.Sc., or B.Sc. (Hons.) in Zoology with at least one year's Research Experience). The scholarship is under the Research Training Scholarships Scheme of the Government of India, Ministry of Education (Department of Science) and the award will be for a period of three years with six months probation in the first instance. Applications on plain paper indicating full particulars of candidates should reach the Director, Central Marine Fisheries Research Institute, Marine Fisheries Post, Mandapam Camp, Ramanathapuram District, Tamil Nadu, before 15-5-1969.

*** UNIVERSITY OF BOMBAY MASTER'S DEGREE IN MANAGEMENT STUDIES.**

Duration: Two years.

Qualification: Bachelor's Degree in any faculty of any University.

Application available from:—

Jamnalal Bajaj Institute of Management Studies.

Dadabhai Naoroji House,
164, Backbay Reclamation,
Road No. 3. Bombay-20.

**Last date for Applications:
17th May, 1969.**

* வேலூர், கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (Christian Medical College, Vellore). எம்.பி.பி எஸ். வைத்தியப் படிப்பிற்கு மனு அனுப்பவேண்டிய கடைசி நாள் 30-4-69. மனுக்கள் பெற ரூ 2. M. O. மூலம் ரிஜிஸ்தராருக்கு விண்ணப்பிக்கலாம்.

சென்னை-14, நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸில் அச்சிடப் பெற்று, சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் மு. சேது ஆச்சி, 12, இராமாநுசம் தெரு, சென்னை-17, தமிழ்நாடு.
ஆசிரியர்: புலவர் நாகசண்முகம்.